winmeen.com

# இரண்டாம் வார நடப்பு நிகழ்வுகள்

ஜூன் 2021

ஜூன் 08-14

**1. தேசிய மாணவர் படையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) மும்பை

**ஆ) புது தில்லி ☑**

இ) கொச்சின்

ஈ) விசாகப்பட்டினம்

- ✓ தேசிய மாணவர் படை என்பது இந்திய ஆயுதப்படைகளின் இளையோர் பிரிவாகும். அதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.
- ✓ தேசிய மாணவர் படை தலைமை இயக்குநரகத்தின் திறன்பேசி பயிற்சி செயலி 2.0'ஐ 2021 மே.28 அன்று பாதுகாப்புத்துறை செயலாளர் டாக்டர் அஜய்குமார் தொடங்கிவைத்தார். COVID-19 பெருந்தொற்றின்போது நாடு முழுவதும் உள்ள தேசிய மாணவர் படையினருக்கு இணையவழியில் பயிற்சியளிப்பதற்கு இந்தச் செயலி உதவிகரமாக இருக்கும்.

---

**2. புலம்பெயர் வனவுயிரிகளுக்கான பாதுகாப்பு அமைப்பின் தூதர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட இந்தியர் யார்?**

அ) சோனு சூத்

**ஆ) ரண்தீப் ஹூடா ☑**



இ) மனோஜ் பாஜ்பாய்

ஈ) சுனில் ஷெட்டி

- ✓ ஐநா சுற்றுச்சூழல் அமைப்பின் கீழியங்கும் புலம்பெயர் வனவுயிரிகளின் பாதுகாப்பு அமைப்பின் தூதர் பதவியிலிருந்து ரண்தீப் ஹூடா நீக்கப்பட்டு -ள்ளார். பகுஜன் சமாஜ் கட்சி தலைவரான மாயாவதி குறித்து அவதூறா -க பேசியதற்காக நடிகர் ரண்தீப் ஹூடா ஐநா தூதர் பதவியிலிருந்து நீக் -கப்பட்டுள்ளார். CMS அல்லது பான் தீர்மானம் என்பது கடந்த 1979'இல் கையெழுத்திடப்பட்ட ஒரு சர்வதேச தீர்மானமாகும். அது புலம்பெயர்ந்த உயிரினங்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**3. உலக கடலாமை நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) மே 22

**ஆ) மே 23 ☑**



இ) மே 24

ஈ) மே 25

- ✓ ஒவ்வோர் ஆண்டும் மே.23 அன்று உலகம் முழுவதும் உலக கடலாமை நாள் அனுசரிக்கப்படுகிறது. நிலம் மற்றும் நீரில் வாழும் ஆமை மற்றும் அவற்றின் பாதிக்கப்படக்கூடிய வாழ்விடங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.
- ✓ 1990'இல் நிறுவப்பட்ட அமெரிக்க ஆமை மீட்பு என்ற இலாபநோக்கற்ற அமைப்பு, கடந்த 2000ஆம் ஆண்டு முதல் உலக கடலாமை நாள் கொ -ண்டாட்டத்திற்கு தலைமைதாங்குகிறது. "Turtles Rock!" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**4. நடப்பாண்டில் (2021) வரும் பன்னாட்டு ஐநா அமைதிகாப்போர் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Women in Peacekeeping: A Key to Peace

ஆ) Honouring Peacekeeping




இ) Women, Peace and Security

**ஈ) The road to a lasting peace ☑**

- ✓ அமைதிகாக்கும் படையினரின் பங்களிப்பை போற்றுதற்காக ஒவ்வோர் ஆண்டும் மே.29 அன்று பன்னாட்டு ஐநா அமைதிகாப்போர் நாள் கொ -ண்டாடப்படுகிறது. "The road to a lasting peace: Leveraging the power of youth for peace and security" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.
- ✓ கடந்த 1948ஆம் ஆண்டு முதல், தங்கள் சேவையின்போது உயிரிழந்த 3,900'க்கும் மேற்பட்ட ஐநா அமைதிகாக்கும் படையினரை ஐநா அவை கௌரவித்து வருகிறது.

---

**5. நடப்பாண்டில் (2021) வரும் உலக புகையிலை ஒழிப்பு நாளுக் -கான கருப்பொருள் என்ன?**

அ) Tobacco: deadly in any form or disguise




ஆ) Tobacco – a threat to development

இ) Tobacco kills, don't be duped

**ஈ) Quit Tobacco to be a Winner ☑**

- ✓ உலகளாவிய புகையிலை நுகர்வினை 24 மணிநேர காலத்திற்கு தவிர்ப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் மே.31 அன்று உலக புகையிலை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ✓ புகைப்பதனால் ஏற்படும் உடல்நலச்சீர்கேடு விளைவுகளால் தற்போது உலகெங்கிலும் கிட்டத்தட்ட 6 மில்லியனுக்கும் அதிகமானோர் மரணிக் -கின்றனர். இதில் 6 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் புகைப்பவர்களின் அருகில் இருப்பதாலேயே நோய்த்தாக்கத்திற்கு ஆளாகிறார்கள். "Quit Tobacco to be a Winner" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளு -க்கான கருப்பொருளாகும்.

---

**6. பரப்பளவில் இந்தியாவின் மிகச்சிறிய மாநிலமும் மே.30 அன்று அதன் மாநில நாளைக் கொண்டாடும் மாநிலமும் எது?**

**அ) கோவா ☑**



ஆ) சிக்கிம்

இ) திரிபுரா

ஈ) மேகாலயா

- ✓ கோவா – இந்தியாவின் மிகச்சிறிய மாநிலமாகவும், மக்கள்தொகை அடி -ப்படையில் நான்காவது சிறிய மாநிலமாகவும் உள்ளது. அண்மையில் இது தனது மாநில நாளை மே.30 அன்று கொண்டாடியது. 1961ஆம் ஆண்டில், 'ஆபரேஷன் விஜய்' மூலம் இந்திய ராணுவம் கோவா, டாமன் & டையூ ஆகியவற்றை இந்திய ஒன்றியத்துடன் இணைத்தது.
- ✓ அதன்பிறகு கோவா, டாமன் & டையூவுடன் இணைந்து இந்தியாவின் மத்திய நிர்வாக யூனியன் பிரதேசமாக வகைப்படுத்தப்பட்டது. கடந்த 1987 மே.30 அன்று அந்த யூனியன் பிரதேசம் பிளவுபட்டு, கோவா இந்தியாவின் 25ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது. டாமன் & டையூ தொடர்ந்து யூனியன் பிரதேசமாகவே இருந்தது.

---

**7. பன்னாட்டு எவரெஸ்ட் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) மே 28



**ஆ) மே 29 ☑**

இ) மே 30

ஈ) மே 31

- ✓ ஆண்டுதோறும் மே.29 அன்று உலகெங்கும் பன்னாட்டு எவரெஸ்ட் நாள் கொண்டாடப்படுகிறது. கடந்த 1953ஆம் ஆண்டு இதே நாளன்று, நேபாளத்தின் டென்சிங் நோர்கே மற்றும் நியூசிலாந்தின் எட்மண்ட் ஹிலாரி ஆகியோர் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை வெற்றிகரமாக அடைந்தனர். போற்றத்தக்க இந்தச் சாதனையை நிகழ்த்திய முதல் மனி -தர்களாவர் இவ்விருவர்.
- ✓ 2008ஆம் ஆண்டில் எட்மண்ட் ஹிலாரி காலமானதிலிருந்து இந்நாளை பன்னாட்டு எவரெஸ்ட் நாளாகக் கொண்டாட நேபாளம் முடிவுசெய்தது.

---

**8. ஒலிபரப்பாளர்களின் உயர்மட்ட அமைப்பான இந்திய ஒலிபரப்பு அறக்கட்டளையின் புதிய பெயர் என்ன?**

அ) Indian Broadcasting Union

**ஆ) Indian Broadcasting and Digital Foundation ☑**

இ) Indian Broadcasting and OTT Union

ஈ) National Digital Broadcasting Federation

- ✓ ஒலிபரப்பாளர்களின் உயர்மட்ட அமைப்பான இந்திய ஒலிபரப்பு அறக்கட்டளையானது இந்திய ஒலிபரப்பு மற்றும் டிஜிட்டல் அறக்கட்டளை என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- ✓ டிஜிட்டல் ஊடக உள்ளடக்க ஒழுங்குமுறை கவுன்சில் என்ற தன்-கட்டுப் -பாட்டு அமைப்பை உருவாக்குவதன்மூலம், டிஜிட்டல் தளங்களை உள்ளடக்கும் வகையில் அதன் பார்வையை விசாலாமாக்குகிறது இந்த

அமைப்பு. ஒலிபரப்பாளர்களையும், OTT தளங்களையும் இது ஒரே கூரை -யின்கீழ் கொண்டுவரும்.

---

**9.** **1977 அமைதிக்கான நோபல் பரிசை வென்ற எந்த அரசு சாரா அமைப்பு, மே.28 அன்று நினைவுகூரப்படுகிறது?**

அ) ஐக்கிய நாடுகள்

ஆ) உலக நலவாழ்வு அமைப்பு

**இ) பன்னாட்டு மன்னிப்பு அவை ☑**

ஈ) உலக வங்கி

- ✓ பன்னாட்டு மன்னிப்பு அவை என்பது மனிதவுரிமைகளை மையமாகக் கொண்ட ஓர் அரசு–சாரா அமைப்பாகும். இது, கடந்த 1961ஆம் ஆண்டில் லண்டனில் நிறுவப்பட்டது. பன்னாட்டு பொது மன்னிப்பு நாளானது ஒவ்வோர் ஆண்டும் மே.28 அன்று கொண்டாடப்படுகிறது.
- ✓ சித்திரவதைக்கு எதிரான பரப்புரைக்காக, 1977ஆம் ஆண்டில் அமைதிக் -கான நோபல் பரிசும், 1978'இல் மனிதவுரிமைகள் துறையில் ஐக்கிய நாடுகள் பரிசும் வழங்கப்பட்டது.

---

**10.** **எந்த மாநிலம், சமீபத்தில் தனது கிராமப்புற வீடுகளுக்கு, சூரிய ஆற்றல் அடிப்படையிலான மின்மயமாக்கல் திட்டத்தை தொடங்கி வைத்தது?**

அ) உத்தர பிரதேசம்

ஆ) ஒடிஸா

இ) அஸ்ஸாம்

**ஈ) கோவா ☑**



- ✓ முதலமைச்சர் பிரமோத் சாவந்த் தலைமையிலான கோவா மாநில அரசு, மாநிலத்தின் கிராமப்புற வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க சூரிய ஆற்றல் அடிப்படையிலான மின்மயமாக்கல் திட்டத்தை தொடங்கியுள்ளது. மின் கட்டமைப்பின் வழியான இணைப்பு சாத்தியமில்லாத வீடுகளுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுதொடர்பாக, கோவா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் கன்வர்ஜென்ஸ் எனர்ஜி சர்வீசஸ் லிட்டுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கோவிஷீல்ட் தடுப்பூசி மூலமாக அதிக நோய்எதிர்ப்புத் திறன்: ஆய்வில் தகவல்**

கோவேக்ஸின் கரோனா தடுப்பூசியைவிட கோவிஷீல்ட் தடுப்பூசியின் மூலமாக அதிக நோய்எதிர்ப்புத்திறன் உருவாவதாக ஆய்வில் தெரியவந் -துள்ளது. பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த கோவேக்ஸின், சீரம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கோவிஷீல்ட், ரஷியாவிலிருந்து இறக்கும -தி செய்யப்படும் ஸ்புட்னிக்–வி கரோனா தடுப்பூசிகள் மக்களுக்கு செலுத் -தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கோவேக்ஸின், கோவிஷீல்ட் ஆகிய தடுப்பூசிகளின் செயல்திறனை ஒப்பிடுவதற்கான ஆய்வுகள் முன் -னெடுக்கப்பட்டன.

13 மாநிலங்களைச் சேர்ந்த 22 நகரங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. கரோனா தடுப்பூசிகளின் இருதவணைகளையும் செலுத்திக்கொண்ட 515 சுகாதாரப்பணியாளர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 210 பேர் பெண்களாவர். அவர்களிடமிருந்து ரத்த மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்கு உள்படுத்தப்பட்டது. அதில், கரோனா தீநுண்மியை எதிர்கொள்வதற்கான நோயெதிர்பொருள் எவ்வளவு உருவாகியுள்ளது என்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வு தொடர்பாக கொல்கத்தாவை சேர்ந்த மருத்துவர் அவதேஷ் குமார் சிங் வெளியிட்ட சுட்டுரைப் பதிவில், 'கோவேக்ஸின், கோவிஷீல்ட் தடுப்பூசிகளின் இரு தவணைகளையும் செலுத்திக் கொண்ட பிறகு, உடலில் கரோனா தீநுண்மிக்கு எதிராக நோயெதிர்ப்புத்திறன் சிறப்பாக உருவாகிறது. எனினும். கோவேக்ஸின் தடுப்பூசியுடன் ஒப்பிடுகையில் கோவிஷீல்ட் தடுப்பூசியில் நோயெதிர்பொருள் அதிக அளவில் உருவாகி -றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவா்களில் 425 பேருக்கு கோவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தப்பட்டது. அவர்களில் 98.1% பேருக்கு அதிக அளவில் நோயெதிர்பொருள் உருவாகியிருந்தது.

கோவேக்ஸின் தடுப்பூசி செலுத்தப்பட்ட 90 பேரில் 80 சதவீதம் பேருக்கு மட்டுமே அதிக அளவில் நோய்எதிர்பொருள் உருவாகியிருந்தது.

கரோனா தீநுண்மியின் புறப்பரப்பு புரதத்தைத் தாக்கக்கூடிய நோய்எதிர் பொருள் கோவிஷீல்ட் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவா்களிடம் அதிகமாக உருவாகியிருந்தது' என்று குறிப்பிட்டுள்ளார். பாலினம், எடை, உயரம், இணை–நோய்கள் உள்ளிட்ட காரணிகள் உடலில் நோய்எதிர் பொருள் உருவாவதில் பெரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தவில் -லை. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மட்டும் நோய்எதிர்ப்புத்திறன் குறைவாக உருவாகியிருந்தது.

கரோனா தொற்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்டு, 6 வாரங்களுக்குப்பிறகு தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு அதிகளவில் நோய்எதிர்பொருள் உருவாகியிருந்தது. கோவிஷீல்ட் தடுப்பூசியை செலுத்திக்கொண்ட 5.5 சதவீதத்தினருக்கும், கோவேக்ஸின் தடுப்பூசியை செலுத்திக்கொண்ட 2.2 சதவீதத்தினருக்கும் கரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டது என்று ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

---

**2. இந்திய MSME துறையை ஊக்குவிக்க ₹3,650 கோடி திட்டம்: உலக வங்கி ஒப்புதல்**

கரோனா பொது முடக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தர (MSME) தொழில்துறையை புத்துயிரூட்ட ₹3,650 கோடி ($50 கோடி) திட்டத்துக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்திருக்கிறது. இது குறித்து உலக வங்கி அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: கரோனா பொது முடக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட குறு, சிறு & நடுத்தர தொழில் துறையைப் புத்துயிரூட்ட இந்திய அரசு தேசிய அளவிலான திட்டத்தை அறிவித்துள்ளது. இதற்கு உதவும் வகையில் ₹3,650 கோடி திட்டத்துக்கு உலக வங்கியின் செயல் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தத் திட்டம் இந்தியாவில் உள்ள 5,55,000 குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்த உதவும். அத்துடன், இந்தத் துறைக்கு புத்துயிரளிக்க மத்திய அரசு அறிவித்துள்ள ₹24,820 கோடி கடனுதவித் திட்டத்தின் ஒருபகுதியாக ₹1,13,150 கோடி நிதியைத் திரட்டவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு உலக வங்கி அளிக்கும் இரண்டாவது உதவித்திட்டம் இது. ஏற்கனவே, MSME அவசரகால உதவி திட்டத்தின்கீழ் கடந்த 2020ஆம் ஆண்டு ஜூலையில் ₹5,475 கோடி திட்டத்துக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்தது. அதன்மூலம், 50 இஇலட்சம் குறு, சிறு நிறுவனங்கள் அரசிடமிருந்து கடனுதவி பெற்று, தொழிலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இப்போது புதிதாக அளித்திருக்கும் ஒப்புதல்மூலம், MSME துறையின் உற்பத்தியைப்பெருக்கவும், நிதி நிலையை மேம்படுத்துவதற்கென கடந் -த ஓராண்டில் ₹9,125 கோடி அளவில் உலக வங்கி ஒப்புதல் அளித்திருக் -கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் NASA திட்டத்தை வழிநட -த்தும் தமிழ்ப்பெண்**

மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் NASA'இன் திட்டத்தில் தமிழ்ப் பெண் முக்கிய பங்காற்றிவருகிறார். இந்தியாவை பூர்வீகமாகக்கொண்ட கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் உட்பட பலர் அமெரிக்காவின் NASA விண்வெளி ஆய்வுமையத்தின் திட்டங்களில் முக்கிய பங்காற்றி உள்ளனர்.

கடந்த பிப்ரவரியில் NASA'இன் பெர்ஸிவரன்ஸ் விண்கலம் வெற்றிகரமாக செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது. இந்த திட்டத்தை கர்நாடகாவின் சுவாதி மோகன் வழிநடத்தி ஒட்டுமொத்த உலகத்தின் கவனத்தையும் ஈர்த்தார். இந்த வரிசையில் தமிழ்நாட்டின் கோயம்புத்தூரை பூர்வீகமாகக் கொண்ட சுபாஷினி, நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் NASA'இன் திட்டத்தில் முக்கிய பங்காற்றி வருகிறார்.

கடந்த 1969 ஜூலை 20ஆம் தேதி அமெரிக்காவின் அப்போலா 11 விண்கலம் நிலவில் தரையிறங்கியது. அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் முதல் மனிதராக நிலவில் கால் பதித்தார்.

வரும் 2024ஆம் ஆண்டுக்குள் மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப NASA தீவிரமாக பணியாற்றி வருகிறது. இதற்காக ஓரியான் என்ற விண்கலத்தை NASA உருவாக்கியுள்ளது. இந்த விண்கலம் கடந்த 2014ஆம் ஆண்டில் ஆளில்லாமல் விண்வெளிக்கு செலுத்தப்பட்டு

பத்திரமாக பூமிக்கு திரும்பியது. நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்துக்கு ஆர்ட்டெமிஸ் என்று NASA பெயரிட்டுள்ளது.

ஆர்ட்டெமிஸ் 1 திட்டத்தில் வரும் நவம்பர் மாதம் ஓரியான் விண்கலம் ஆளில்லாமல் நிலவின் விண்வெளி பகுதிக்கு செலுத்தப்பட்டு, பூமிக்கு திரும்ப உள்ளது. இதன் பிறகு ஆர்ட்டெமிஸ் 2 திட்டத்தில் வரும் 2023 அல்லது 2024ஆம் ஆண்டில் ஓரியான் விண்கலம், விண்வெளி வீரர்க –ளுடன் நிலவில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏவுகணை தயாரிப்பு திட்டம்**

இந்த திட்டத்தின் முதுகெலும்பாக கருதப்படும் ஏவுகணை தயாரிப்பு திட்டப் பணிகளை தமிழகத்தின் கோவையைச் சேர்ந்த சுபாஷினி அய்யர் வழிநடத்தி வருகிறார். இதுகுறித்து அவர் கூறியதாவது: ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தை NASA செயல்படுத்த உள்ளது. நிலவை தாண்டி செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பவும் இந்ததிட்டம் முன்னோடியாக இருக்கும்.

ஆர்ட்டெமிஸ் 1 திட்டத்தில் ஓரியான் விண்கலம் 4.5 இலட்சம் கி.மீ. தொலைவுக்கு அப்பால் ஆளில்லாமல் செலுத்தப்பட உள்ளது. இது 3 வார பயண திட்டமாகும். எஸ்எல்எஸ் என்ற உலகின் அதிகசக்திவாய்ந்த ஏவுகணையில், ஓரியான் நிலவுக்கு செலுத்தப்பட உள்ளது. NASA மற்றும் போயிங் நிறுவனம் இணைந்து இந்த ஏவுகணையை தயாரிக்கிறது. கடந்த 2 ஆண்டுகளாக போயிங்நிறுவன குழுவின் மேற்பார்வையாளரா –க பணியாற்றி வருகிறேன். 500 விநாடிகளில் 5.3 இலட்சம் அடி பாயும் வகையில் ஏவுகணை தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**1.** **உலக பால் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) ஜூன்.1 ☑**

ஆ) ஜூன்.2

இ) ஜூன்.3

ஈ) ஜூன்.4



✓ உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.1 அன்று உலக பால் நாள் கொண்டாடப்படுகிறது. முதல் உலக பால் நாள், 2001ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. பாலின் பங்கை சிறப்பித்துக்கூறுவதற்கும், பால் மற்றும் பால் உற்பத்தித் துறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை கொண்டு சேர்ப்பதற்குமாக ஐநா அவையின் உணவு மற்றும் உழவு அமைப்பு ஜூன்.1ஆம் தேதியை உலக பால் நாளாக தேர்வுசெய்தது.

---

**2.** **உலக பெற்றோர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) ஜூன்.1 ☑**

ஆ) ஜூன்.2

இ) ஜூன்.3

ஈ) ஜூன்.4



✓ 2012'இல், ஜூன்.1ஆம் தேதியை, உலக பெற்றோர் நாளாக ஐநா பொது அவை அறிவித்தது. அதன்பின்னர், ஆண்டுதோறும் ஜூன்.1 அன்று உலக பெற்றோர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகெங்கும் உள்ள அனைத்து பெற்றோர்களையும், தங்கள் குழந்தைகளுக்காக அவர்கள் செய்யும் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்திற்காக அவர்களை கௌரவிக்கும் நோக்கத்துடன் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

✓ "Appreciate All Parents Throughout the World" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**3.** **உலக மிதிவண்டி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) ஜூன்.1

ஆ) ஜூன்.2

**இ) ஜூன்.3 ☑**

ஈ) ஜூன்.4



✓ ஐநா பொது அவையானது ஜூன்.3ஆம் தேதியை உலக சைக்கிள் நாளாக அறிவித்தது. நீடித்த வளர்ச்சி மற்றும் நலத்தை மேம்படுத்துவதற்கான ஒருவழியாக, மிதிவண்டிப் பயன்பாட்டை ஊக்குவிக்க ஐநா அதன் இணை அமைப்புகளை ஊக்குவிக்கிறது. தேசிய மற்றும் உள்ளூரளவில் மிதிவண்டிப்பேரணிகளை நடத்துவதற்கும், சமூகத்தில் மிதிவண்டி ஓட்டுதல் கலாசாரத்தை வளர்ப்பதற்கும் இந்நாள் பல்வேறு முன்னெடுப்புகளுக்கு அழைப்பு விடுக்கிறது.

---

**4.** **ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி சிறார்களுக்கான பன்னாட்டு நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

அ) ஜூன்.1

ஆ) ஜூன்.2

இ) ஜூன்.3

**ஈ) ஜூன்.4 ☑**




✓ ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி சிறார்களுக்கான பன்னாட்டு நாள் ஆனது ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.4ஆம் தேதி அன்று ஐநா அமைப்பால் நினைவுகூரப்படும் ஒரு நாளாகும். இது, 1982 ஆக.19 முதல் ஆண்டுதோறும் நினைவுகூரப்பட்டு வருகிறது.

✓ உடல், மன மற்றும் உணர்ச்சி ரீதியான பாதிப்புகளுக்கு ஆளான உலகெங்கிலும் உள்ள சிறார்கள் அனுபவிக்கும் வலியை உணர்ந்துகொள்வதே இதன் நோக்கமாகும். இந்த நாள் சிறார்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஐநா'இன் உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறது.

---

**5.** **நடப்பாண்டில் (2021) வரும் உலக சுற்றுச்சூழல் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Climate Action

**ஆ) Ecosystem Restoration ☑**

இ) Enrich Our Environment

ஈ) Environment and SDG



✓ விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்காக ஐநா அவை ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.5 அன்று உலக சுற்றுச்சூழல் நாளைக் கொண்டாடப்படுகிறது. "Ecosystem Restoration" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**6.** **"சட்டத்துக்குப்புறம்பான, பதிவுசெய்யப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடித்தலை தடுப்பதற்கான பன்னாட்டு நாள்" அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஜூன்.2

ஆ) ஜூன்.3

இ) ஜூன்.4

**ஈ) ஜூன்.5 ☑**



✓ "சட்டத்துக்குப் புறம்பான, பதிவுசெய்யப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற மீன்பிடித்தலை தடுப்பதற்கான பன்னாட்டு நாள்", ஒவ்வோராண்டும் ஜூன்.5 அன்று அனுசரிக்கப்படுகிறது. கட்டுப்பாடற்ற மீன்பிடி நடவடிக்கைகளால் மீன்வளங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து உணர்துதலே இந்நாளின் நோக்கமாகும். கடந்த 2017 நவம்பரில், ஐநா பொது அவை, ஜூன் 5ஆம் தேதியை இந்தச் சிறப்பு நாளாக அறிவித்தது. கடந்த 2018ஆம் ஆண்டில் முதன்முறையாக இந்நாள் கொண்டாடப்பட்டது.

---

**7.** **நடப்பாண்டு (2021) வரும் உலக உணவு பாதுகாப்பு நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) Safe Food Today for a Healthy Tomorrow ☑**

ஆ) Food Safety, Everyone's Business

இ) Food Safety, First and Foremost

ஈ) Food Safety is still far




✓ நாம் உண்ணும் உணவு பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்தும் முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக, ஜூன்.7 அன்று உலக உணவு பாதுகாப்பு நாள் கடைப்பிடிக்கப்பட்டது. "Safe Food Today for a Healthy Tomorrow" என்பது நடப்பாண்டு (2021) உலக உணவு பாதுகாப்பு நாளுக்கான கருப்பொருளாகும். உணவுப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கும், தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்துதற்கு நாடுகள், உள்நாட்டு சமூகம் மற்றும் தனியார் நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்குமாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---


**8.** **நடப்பாண்டில் (2021) வரும் உலக பெருங்கடல்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) The Ocean: Life and Livelihoods ☑**

ஆ) Innovation for a Sustainable Ocean

இ) Oceans are our real wealth

ஈ) Optimise our Oceans



✓ உலக பெருங்கடல்கள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.8 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. பெருங்கடல்களைக் கொண்டாட மக்களை ஊக்குவிப்பதற்கும், கடல் நலத்தைப்பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ "The Ocean: Life and Livelihoods" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். கடந்த 1992ஆம் ஆண்டில் ரியோ டி ஜெனிரோவில் நடந்த புவி உச்சிமாநாட்டில், உலக பெருங்கடல்கள் நாளைக் கொண்டாடுவதற்கான கருத்தை கனடா நாடு முன்மொழிந்தது. கடந்த 2008 டிசம்பரில், ஐநா அவை ஜூன்.8ஆம் தேதியை உலக பெருங்கடல்கள் நாளாக நியமித்து அறிவித்தது.

---

**9.** நியூ கினியாவின் மழைக்காடுகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட 'லிட்டோரியா மிரா' என்பது ஒரு____?



அ) பாம்பு

**ஆ) தவளை ☑**


இ) நீர் நாய்

ஈ) பேரலகுப் பறவை

✓ ஆஸ்திரேலிய அறிவியலாளர்கள் குழுவானது நியூ கினியாவின் மழைக் காடுகளிலிருந்து ஒரு புதிய மரத்தவளை இனத்தைக் கண்டறிந்துள்ளது. அதன் சாக்லேட் நிறம் காரணமாக, "சாக்லேட் தவளை" என்றும் அது அழைக்கப்படுகிறது. அது லிட்டோரியா என்ற ஆஸ்திரேலிய மரத்தவளை இனத்தைச்சேர்ந்ததாகும். எனவே இப்புதிய இனத்திற்கு 'லிட்டோரியா மிரா' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த புதிய இனத்தின் நெருங்கிய இனமாக ஆஸ்திரேலிய பச்சை மரத்தவளை இனம் உள்ளது.

---

**10.** நான்ஸி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கியை உருவாக்கும் நாடு எது?



அ) ஜப்பான்

**ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ) ரஷியா

ஈ) இஸ்ரேல்

✓ நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கி என்பது NASA'இன் புதிய அடுத்த தலைமுறை விண்வெளி தொலைநோக்கியாகும். அது தற்போது உருவாக்க நிலையில் உள்ளது. முன்னர், Wide Field Infrared Survey தொலைநோக்கி என்று அழைக்கப்பட்ட இது, NASA'இன் முதல் வானியல் துறை தலைவரான நான்ஸி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கி எனப் பெயரிடப்பட்டது. அண்மையில், சூப்பர்நோவா எனப்படும் ஆயிரக்கணக்கான வெடிக்கும் விண்மீன்கள் இந்தத்தொலை நோக்கிமூலம் கண்காணிக்கப்படுவதாக NASA அறிவித்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தேர்தல் ஆணையராக அனூப் சந்திர பாண்டே நியமனம்**

முன்னாள் IAS அதிகாரி அனூப் சந்திர பாண்டே (62) தேர்தல் ஆணைய–ராக நியமிக்கப்பட்டார். 1984ஆம் ஆண்டு உத்தர பிரதேச பிரிவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற IAS அதிகாரியான அனூப் சந்திர பாண்டேயை தேர்தல் ஆணையராக குடியரசுத்தலைவர் நியமித்ததாக மத்திய சட்ட அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அவரது இந்நியமனம் உடனடி–யாக அமலுக்கு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தேர்தல் ஆணையராக இருந்த சுனில் அரோரா கடந்த ஏப்.12 அன்று ஓய்வுபெற்றதையடுத்து, சுஷீல் சந்திரா தலைமைத் தேர்தல் ஆணையராகப் பதவி உயர்வுபெற்றார். இதனால் ஒரு தேர்தல் ஆணை–யர் பதவி காலியானது. அந்த இடத்துக்கு, தற்போது அனூப் சந்திர பாண்டே நியமிக்கப்பட்டுள்ளார். வரும் 2024ஆம் ஆண்டு பிப்ரவரியில் அவருக்கு 65 வயது பூர்த்தியாகும் வரை அவர் தேர்தல் ஆணையராகப் பதவி வகிப்பார். உத்தர பிரதேச தலைமைச் செயலர் உள்ளிட்ட பல முக்கிய பதவிகளை அவர் வகித்துள்ளார்.

---

**2. கரோனா உறுதியானால் என்ன செய்ய வேண்டும்?**

**ஒன்றிய சுகாதார அமைச்சகத்தின் புதிய வழிகாட்டுதல்கள் வெளியீடு**

**அறிகுறிகள் இல்லாத கரோனா நோயாளிகள்**

வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்

6 நிமிட நடைப்பயிற்சி பரிசோதனை

முகக்கவசம், கைகள் தூய்மை, பிறரிடமிருந்து விலகியிருத்தல் குறைந்த பாதிப்புடைய நோயாளிகள்

வீட்டில் தனிமைப்படுத்துதல்

6 நிமிட நடைப்பயிற்சி பரிசோதனை

முகக்கவசம், கைகள் தூய்மை, தனிநபர் இடைவெளி

4 மணி நேரத்துக்கு ஒருமுறை நாடித்துடிப்பு, ரத்த ஆக்சிஜன் அளவு, ரத்த அழுத்தம், உடல் வெப்ப பரிசோதனை

காய்ச்சல், சளிக்கு தேவைப்பட்டால் மருந்து உட்கொள்ளவும்

சளி, இருமல் அதிகரித்தால் மூச்சிளைப்பு நோய்க்கான இன்ஹேலர்களைப் பயன்படுத்தலாம்

**மிதமான, தீவிர பாதிப்புக்குள்ளானவர்கள்**

மிதமான பாதிப்புடையவா்கள் மருத்துவமனைகளை நாட வேண்டும்

தீவிர பாதிப்புக்கு ICU பிரிவில் சிகிச்சை அவசியம்

6 நிமிட நடைப்பயிற்சி பரிசோதனை

கைவிரலில் பல்ஸ்–ஆக்ஸி மீட்டரை பொருத்திக்கொண்டு தொடர்ந்து 6 நிமிடங்களுக்கு நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அப்போது ரத்த ஆக்சிஜன் அளவு 94 சதவீதத்துக்கும்கீழ் குறைந்தாலோ, மூச்சுத்திணறல், மயக்கம் ஏற்பட்டாலோ மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மருத்துவ–மனைக்குச் செல்லவேண்டும்.

ஒவ்வொரு 6 – 8 மணி நேரத்துக்கு ஒருமுறை இந்தப் பரிசோதனையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

**தேவையான ஆய்வகப் பரிசோதனைகள்**

முழு ரத்த அணு பரிசோதனை (சிபிசி)

ரத்த சர்க்கரை அளவு

சிறுநீர் பரிசோதனைகள்

சி–ரியாக்டிவ் புரோட்டின் (CRP)

சிறுநீரகம் மற்றும் கல்லீரல் செயல்திறன் பரிசோதனை

ஃபெரிட்டின் எனப்படும் ரத்த உறைதல் தொடர்பான பரிசோதனை

டி–டைமர், LDG, சிபிகே உள்ளிட்ட இரத்தத்தில் கிருமிகள் உள்ளதைக் கண்டறியும் பரிசோதனைகள்.

CRP, டி–டைமர் பரிசோதனைகள் 48 முதல் 72 மணி நேரத்துக்கு முறை மருத்துவரின் ஆலோசனைப்படி திரும்பவும் மேற்கொள்ள வேண்டும்.

நெஞ்சக ஊடு கதிர் (எக்ஸ்–ரே) பரிசோதனைகள் 48 மணி நேரத்துக்குப் பிறகு தேவைப்பட்டால் மட்டுமே மீண்டும் மேற்கொள்ள வேண்டும்.

மிதமான மற்றும் தீவிர பாதிப்புடையவர்கள் மட்டுமே நெஞ்சக CT ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி மட்டுமே மேற்கொண்ட பரிசோதனைகளை செய்தல் வேண்டும்.

**தன்னிச்சையாக எடுக்கக் கூடாத மருந்துகள்**

ரெம்டெசிவிர்

ஸ்டீராய்டு மருந்துகள்

இரத்தம் உறைவதைத் தடுக்கும் ஆன்ட்டிகாக்ளன்ட் மருந்துகள்

டோஸிலிசுமேப் அறிகுறிகளும், பாதிப்புகளும்.

---

**3. ஐ.நா. சமூக–பொருளாதார கவுன்சில் உறுப்பினராக இந்தியா தேர்வு**

ஐ.நா. சமூக–பொருளாதார கவுன்சிலின் உறுப்பினராக 3 ஆண்டுகளுக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஐநா'வின் 6 முக்கிய அமைப்புகளில் சமூக–பொருளாதார கவுன்சிலும் ஒன்றாக உள்ளது.

சமூகம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் ஆகிய விவகாரங்களில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அந்த கவுன்சில் மேற்கொண்டு வருகிறது. சர்வதேச அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்கு–களை அடைவதற்கான நடவடிக்கைகளையும் கவுன்சில் மேற்கொண்டு வருகிறது. ஐநா சார்பில் நடைபெறும் மாநாடுகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிா என்பதையும் கவுன்சில் கண்கா–ணிக்கும்.

ஐநா சமூக–பொருளாதார கவுன்சிலில் 54 நாடுகள் உறுப்பினர்களாக இடம்பெற முடியும். பிராந்திய ரீதியாக நாடுகள் 3 ஆண்டு காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும். ஆசிய கண்டத்தில் இருந்து 11 நாடுகளும், ஆப்பிரிக்க கண்டத்திலிருந்து 14 நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய பகுதிகளில் இருந்து 6 நாடுகளும், தென் அமெரிக்க கண்டத்திலிருந்து 10 நாடுகளும், மற்ற பகுதிகளில் இருந்து 13 நாடுகளும் கவுன்சிலின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும். ஐநா சமூக–பொருளாதார கவுன்சிலுக்கான தேர்தல் நடைபெற்றது. அதில், ஆசிய கண்டத்திலிருந்து இந்தியா, ஆப்கானிஸ்தான், ஓமன், கஜகஸ்தான் ஆகிய நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அந்நாடுகள் 2022–2024 வரை கவுன்சிலின் உறுப்பினர்களாகச் செயல்ப–டவுள்ளன.

ஆப்பிரிக்க கண்டத்திலிருந்து துனிசியா, மோரீஷஸ், எஸ்வதினி, தான்சானியா உள்ளிட்ட நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய பகுதியில் இருந்து குரோஷியா, செக் குடியரசு ஆகிய நாடுகளும், தென் அமெரிக்க கண்டத்தி–லிருந்து சிலி, பெரு உள்ளிட்ட நாடுகளும் ஐநா சமூக–பொருளாதார கவு–ன்சில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

---

**4. 2021–இல் இந்திய பொருளாதார வளர்ச்சி 8.3%: உலக வங்கி கணிப்பு**

2021ஆம் ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாகவும், அதுவே 2022ஆம் ஆண்டு 7.5 சதவீதமாகவும் இருக்கும் என உலக வங்கி கணித்துள்ளது. இதே நேரத்தில் சர்வதேச பொருளாதாரம் 2021ஆம் ஆண்டு 5.6 சதவீதம் வளரும் என்று உலக வங்கி கூறியுள்ளது. உலக வங்கியின் சா்வதேச பொருளாதார அறிக்கை வாஷிங்டனில் வெளியிடப்பட்டது. அதில் இந்தியா பொருளாதாரம் குறித்து கூறப்பட்டுள்ளதாவது: கரோனா இரண்–டாவது அலையின் தாக்கத்திலிருந்து இந்தியா மீண்டு வருகிறது.

முன்னதாக, முதல் அலைத்தாக்கத்திலிருந்து இந்தியப் பொருளாதாரம் வேகமாக எழும்ப முயன்றபோது இரண்டாவது அலை தாக்கியது. எனினு–ம், கடந்த நிதியாண்டின் இரண்டாவது பகுதியில் இந்தியப்பொருளாதாரம் சிறப்பாக இருந்தது. முக்கியமாக சேவைகள் துறை சிறப்பாக செயல்பட்டது.

இப்போது இந்திய அரசு எடுத்துள்ள கொள்கை முடிவுகளால் உள்கட்டமை–ப்பு, கிராமப்புற மேம்பாடு, சுகாதாரத் துறையில் செலவிடப்படுவது அதிகரித்–துள்ளது பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். உற்பத்தி மற்றும் சேவைகள் துறையில் எதிர்பார்த்ததைவிட வலுவான வேகமான மீட்சி இருக்கும். எனவே, 2021ஆம் ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாகும், 2022இல் 7.5 சதவீதமாகவும், 2023இல் 6.5 சதவீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

கரோனா பிரச்சனையால் இந்தியாவில் நுகர்வு, முதலீடு குறைந்துள்ளது. அடுத்து ஆண்டுகளில் இது பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். பணி நிரந்தரமின்மை தொடர்பான அச்சம், வருமான அதிகரிக்காதது போன்றவை பிரச்சனைக்குரிய விஷயங்களாக தொடரும். வீட்டில் போடப்படும் பட்ஜெட் தொடங்கி பெரு நிறுவனங்கள், வங்கிகள் நிதிநிலை அறிக்கை வரை இதன் தாக்கம் அடுத்து வரும் ஆண்டுகளில் இருக்கும் எனக்கூறப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட சில நாடுகளில் சிறப்பான பொருளாதார மீட்சி இருக்கும். வளரும் நாடுகளில் வறுமை, வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கும். ஒட்டுமொத்தமா–க சர்வதேச பொருளாதார வளர்ச்சி 2021'இல் 5.6 சதவீதமாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

---

**5. நாட்டிலேயே முதல் முறையாக 100 சதவீத தடுப்பூசி இலக்கை எட்டிய காஷ்மீர் கிராமம்**

நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்ட 100% பேருக்கும் கரோனா தடுப்பூசி (முதல் டோஸ்) செலுத்தப்பட்ட முதல் கிராமம் என்ற பெருமையை காஷ்மீரின் வேயான் கிராமம் பெற்றுள்ளது. ஜம்மு காஷ்மீரின் பண்டிப்போரா மாவட்ட–த்தில் தொலைதூர மலைப்பகுதியில் உள்ளது வேயான் என்ற கிராமம்.

---

**6. பேஸ்புக் குறைதீர்ப்பு அதிகாரியாக ஸ்பூர்த்தி பிரியா நியமனம்**

பேஸ்புக் நிறுவனத்தின் குறை தீர்ப்பு அதிகாரியாக ஸ்பூர்த்தி பிரியா நியமிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் இணையதளத்தில் தெரிவிக்கப்–பட்டுள்ளது.

OTT மற்றும் சமூக ஊடகங்கள் போன்றவற்றை முறைப்படுத்தும் வகையி–ல் மத்திய அரசு புதிய தொழில்நுட்ப விதிகளைக் கொண்டுவந்துள்ளது. இதன்படி 50 இலட்சத்துக்கும் மேல் பயனாளர்களுள்ள சமூக ஊடகங்கள் குறைதீர்ப்பு அதிகாரியை நியமிக்கவேண்டும். இந்த அதிகாரிகள் இந்தியா–வில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும். இவர்களைப் பயனாளர்கள் தொடர்புகொள்ள தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்றவையு–ம் வழங்கவேண்டும்.

இதன்படி பேஸ்புக் நிறுவனத்தின் குறைதீர்ப்பு அதிகாரியாக ஸ்பூர்த்தி பிரியா நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அவரைப் பயனாளர்கள் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளலாம் என்றும் அதன் இணையதள பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல கூகுள், வாட்ஸ் அப் நிறுவனங்களும் குறைதீர்ப்பு அதிகாரிகளை நியமனம் செய்துள்ளன. இவை குறித்த விவரங்கள் அவற்றின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பயனாளர்களின் புகார்களைப் பெற்றதற்கான ஒப்புகையை 24 மணி நேரத்துக்குள் இந்த அதிகாரிகள் கொடுக்க வேண்டும். மேலும் 15 நாட்களுக்குள் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விதிகளால் பேஸ்புக், ட்விட்டர் ஆகிய நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. இந்நிலையில் அரசியல்வாதிகள், பிரபலங்கள் ஆகியோரின் பதிவுகளும் சாதாரண மக்களின் பதிவுகளைப் போலவே கருதப்படும் என இந்நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

---

**1.** சமீப செய்திகளில் இடம்பெற்ற, அஸ்பெர்ஜில்லோசிஸ் என்பது ஒரு ______நோய்?

அ) வைரல்

ஆ) பாக்டீரியா

**இ) பூஞ்சை ☑**

ஈ) மேற்கண்ட எதுவும் இல்லை



✓ அஸ்பெர்ஜிலஸ் பூஞ்சையால் ஏற்படும் தொற்று, ஒவ்வாமை அல்லது பூஞ்சை வளர்ச்சிதான் அஸ்பெர்ஜில்லோசிஸ். சமீபத்தில், இந்தியாவில் கருப்பு மற்றும் வெள்ளை பூஞ்சை பாதிப்புகள் கடுமையாக அதிகரித்த பின்னர், அஸ்பெர்ஜில்லோசிஸ் நோய்த்தொற்றுகள் பதிவாகியுள்ளன.

✓ COVID–19 நோயாளிகளில் பொதுவாகக் காணப்படும் வலுவிழந்த நோய் எதிர்ப்பு அமைப்புகள் (அ) நுரையீரல் நோய்கள் உள்ளவர்கள் இத்தொற்–றுநோயால் பாதிக்கப்பட அதிக வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

---

**2.**முதலமைச்சரின் சிசு சேவா திட்டத்தை தொடங்கிய மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம்

**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) பீகார்

ஈ) சத்தீஸ்கர்

✓ COVID–19 காரணமாக பெற்றோரை இழந்த குழந்தைகளின் நலனுக்கா–க முதலமைச்சரின் சிஷு சேவா திட்டத்தை அஸ்ஸாம் அரசு சமீபத்தில் அறிவித்தது. பெற்றோரை இழந்த ஆனால் அவர்களின் குடும்ப உறுப்பின–ர்களைக்கொண்ட குழந்தைகளுக்கு மாதத்திற்கு மாத உதவித்தொகை–யாக ₹3,500 வழங்கப்படும். குடும்ப உறுப்பினர்களற்ற குழந்தைகட்கு இலவச குடியிருப்பும் கல்வி வசதிகளும் வழங்கப்படும்.

---

**3.** இந்தியாவின் முதல் நகர கழிவுநீர் கண்காணிப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

**ஆ) கர்நாடகா ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) உத்தர பிரதேசம்



✓ கர்நாடக மாநில அரசானது பெங்களூரில் நகர கழிவுநீர் கண்காணிப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஆரம்ப கட்டத்தில் கொரோனா வைரஸைக் கண்காணிக்கும் நோக்கத்தினைக் கொண்டுள்ளது.

✓ கர்நாடகாவின் இந்த முன்னெடுப்பை USAID (United States Agency for International Development) மற்றும் COVIDactionCollab (CAC) ஆகியவை ஆதரிக்கின்றன. CAC ஆனது தூய்மைத்தொழிலாளர்களுக்கு மாதிரிகள் சேகரிப்பதற்கும் அவற்றை ஆய்வகங்களில் பகுப்பாய்வு செய்வதற்கும் பயிற்சியளிப்பதன்மூலம் மாநிலத்திற்கு உதவுகிறது.

---

**4.** கேரளாவைச்சார்ந்த தஸ்னீம் அஸ்லாம், பின்வரும் எந்நாட்டுக்கு விதிவிலக்கான மாணவர் பிரிவில், 'தங்க விசா'வைப் பெற்றுள்ளார்?

அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ) ஜப்பான்

ஈ) ஆஸ்திரேலியா



✓ கேரளாவைச் சார்ந்த இந்திய மாணவர் தஸ்னீம் அஸ்லாம், ஐக்கிய அரபு அமீரகத்திடமிருந்து விதிவிலக்கான மாணவர் பிரிவின்கீழ் பத்தாண்டுக்–கான 'தங்க விசா'வைப் பெற்றுள்ளார். 2031ஆம் ஆண்டு வரை அவர் ஐக்கிய அரபு அமீரகத்தில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார். இந்த விசா, மிகவும் புகழ்பெற்ற கல்வியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

---

**5.** சமீப செய்திகளில் இடம்பெற்ற, "கடற்கூழ்" என்பது எந்த நாட்டின் கடற்கரையில் குவிந்துவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது?

அ) இந்தியா ஆ) சிங்கப்பூர்

**இ) துருக்கி ☑** ஈ) ஜப்பான்



✓ துருக்கி கடற்கரையில் கடற்கோழை அல்லது கூழ் குவிந்துவருவதாக கூறப்படுகிறது. கடற்கூழ் என்பது தடிமனான ஜெல்லிபோன்ற சேறாகும். இது அலைதாவரம் எனப்படும் நுண்தாவரங்களின் திடீர் அதீத இனப் பெருக்கத்தால் உருவாகிறது. காலநிலைமாற்றங்காரணமாக கடலின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பதே இவ்விளைவுக்கு வழிவகுத்ததாக ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். அதீத மீன்பிடித்தலும் இதற்கு மூல காரணமாக இருக்கும் எனச் சிலர் கருதுகிறார்கள்.

---

**6.** "அகங்க்ஷா" என்ற பெயரில் இணையதளம் ஒன்றை அறிமுகம் செய்துள்ள மாநில அரசு எது?

அ) கர்நாடகா

**ஆ) ஒடிஸா ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) ஹரியானா

✓ கர்நாடக மாநிலத்தின் அனைத்து பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நடவடிக்கைகள்குறித்த விவரங்களை வழங்கும் "அகங்க்ஷா" என்ற பெயரிலான வலைத்தளத்தை கர்நாடக மாநில முதலமைச்சர் எடியூரப்பா தொடங்கினார். இந்த வலைத்தளம் மாநில அரசு அதிகாரிகள், பெரு நிறு–வனங்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கு உதவும்.

✓ சமூக பொறுப்புணர்வு நிதியைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத்தன்–மையை மேம்படுத்த இது முயற்சி செய்கிறது.

---

**7.** ஈகிள் சட்டம் என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள நாடு எது?

**அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

இ) ஐக்கியப் பேரரசு

ஈ) சிரியா



✓ அமெரிக்க சட்டமன்றத்தில், "Ensuring American Global Leadership and Engagement" அல்லது EAGLE சட்டம் என்ற பெயரிலான மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இம்மசோதா சீனா முன்வைக்கும் கொள்கை சவால்களுக்கு எதிர்மாறாக பார்க்கப்படுகிறது. அமெரிக்க உற்பத்தி, வர்த்–தகத்தை மேம்படுத்துவதற்காக, அதிகப்படியான முதலீட்டை இம்மசோ–தா எதிர்நோக்குகிறது. தைவான் & ஹாங்காங்கில் அமெரிக்காவின் தலையீட்டை அதிகரிக்கவும் இது எண்ணம் கொண்டுள்ளது.

---

**8.** ஜெர்மனிக்கும் நார்வேக்கும் இடையிலான கடலுக்கடியில் உள்ள மின்வட திட்டத்தின் பெயர் என்ன?

அ) GermanLink

**ஆ) NordLink ☑**

இ) NorwayLink

ஈ) GeNorLink



✓ ஜெர்மனியும் நார்வேயும் இருநாடுகளுக்கிடையில், 623 கிமீ கடலுக்கடி–யில் உள்ள மின்வடத்தின் செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளன. இந்த திட்டம் 'நார்ட்லிங்க்' என அழைக்கப்படுகிறது. இருநாடுகளுக்கும் இடை–யில் பசுமை ஆற்றலை பரிமாறிக்கொள்ளும் நோக்கங்கொண்டது இது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற $2.2 பில்லியன் டாலருக்கும் அதிகமாக செலவாகியுள்ளது. இது பசுமை ஆற்றலுக்கு மாறுவதற்கான ஒரு முக்கிய முன்னெடுப்பாக கருதப்படுகிறது.

---

**9.** COVID துயரத்தைத் தணிக்கும் ஒரு நடவடிக்கையாக, இந்திய பொதுத்துறை வங்கிகள், பின்வரும் எந்த அளவுவரை பிணையற்ற கடன்களை தனிநபர்களுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளன?

அ) ₹1 இலட்சம்

ஆ) ₹2 இலட்சம்

**இ) ₹5 இலட்சம் ☑**

ஈ) ₹25 இலட்சம்



✓ COVID–19 தொற்றுநோயால் ஏற்படும் பண ரீதியான சிக்கல்களைத் தணிக்கும் ஒருநடவடிக்கையாக, இந்திய பொதுத்துறை வங்கிகள் (PSB),

தனிநபர்களுக்கு, பிணையற்ற கடன்களின் வடிவில் ₹5 இலட்சம் வரை நிதியுதவி வழங்குவதாக அறிவித்துள்ளன.

✓ தடுப்பூசி உற்பத்தியாளர்கள், மருத்துவமனைகள் / மருந்தகங்கள், நோயியல் ஆய்வகங்கள் போன்றவற்றுக்கு நிதியுதவி வழங்க PSB'கள் அறிமுகப்படுத்திய 3 புதிய கடன் தயாரிப்புகளில் இது ஒன்றாகும்.

**10. தொலைகடல் ரோந்துக்கப்பலான 'சஜாக்', பணியில் சேர்க்கப்பட்டுள்ள ஆயுதப்படை எது?**

**அ) இந்திய கடலோர காவற்படை ☑**

ஆ) இந்திய கடற்படை

இ) இந்திய இராணுவம்

ஈ) CRPF



✓ தொலைகடல் ரோந்துக்கப்பலான 'ICG சஜாக்', இந்திய கடலோர காவற்படையில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவாளால் பணியில் சேர்க்கப்பட்டது. இந்தக் கப்பல், கோவா கப்பல் கட்டுந்தளத்தில் கடலோர காவற்படைக்காக பிரத்தியேகமாக கட்டப்பட்டுள்ளது. இந்திய கடலோர காவல்படையானது தற்போது 160 கப்பல்களையும் 62 வானூர்திகளையும் அதன் கடற்படையில் கொண்டுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. குறைந்தபட்ச ஆதார விலை நெல்லுக்கு ₹72 அதிகரிப்பு: ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்**

தில்லியில் பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவை கூட்டத்தில், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு ₹72 உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. 2021-2022 நிதியாண்டில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை ₹1,868-லிருந்து ₹72 அதிகரித்து ₹1,940-ஆக நிர்ணயிப்பதற்கு மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. கம்புக்கான குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு ₹2,150-லிருந்து ₹2,250-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**2. கோவின் இணையதளத்தில் தமிழ் மொழி சேர்ப்பு**

கரோனா தடுப்பூசிக்கான முன்பதிவு செய்யும் கோவின் இணையதளத்தில் தமிழ் மொழி சேர்க்கப்பட்டுள்ளது.

கோவின் இணையதளத்தில் ஹிந்தி, மராத்தி, குஜராத்தி உள்ளிட்ட மாநில மொழிகள் சேர்க்கப்பட்ட நிலையில், தமிழ் மொழி சேர்க்கப்படமால் இருந்தது. இதையடுத்து மாநில மொழிகள் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் மொழி சேர்க்கப்படாமல் இருந்ததற்கு பல தரப்பில் இருந்தும் கண்டனம் எழுந்தது. இந்நிலையில், கோவின் இணையதளத்தில் தமிழ் மொழி சேர்க்கப்பட்டுள்ளது. கரோனா தடுப்பூசிக்கான முன்பதிவு செய்யும் இணையத்தில் செம்மொழியான தமிழ் 12ஆவது மொழியாக சேர்க்கப்பட்டுள்ளது.

**3. உலகத்தரவரிசை: முதல் 200 இடங்களில் 3 இந்திய பல்கலைகள்**

QS உலக பல்கலைக்கழக தரவரிசைப்பட்டியலில் 3 இந்திய பல்கலைகள் முதல் 200 இடத்துக்குள்ளாக வந்துள்ளன. ஆராய்ச்சி பிரிவில், உலக அளவில் முதலாவது இடத்தில் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் உள்ளது. உலக அளவில் உயர்கல்விகுறித்து 'குவாக்கரெலி சைமண்ட்ஸ்' (QS) என்ற அமைப்பு ஆய்வுசெய்து தரவரிசைப் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு வருகிறது. இந்த அமைப்பு தனது 18ஆவது சர்வதேச பல்கலை தரவரிசைப்பட்டியலை வெளியிட்டது.

இதில் மும்பை ஐஐடி 177-ஆவது இடத்தையும், தில்லி ஐஐடி 185-ஆவது இடத்தையும், பெங்களூரு IISc 186-ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

**4. அந்தமான் கடல் பகுதியில் இந்தியா-தாய்லாந்து கடற்படைகள் கூட்டு ரோந்து**

அந்தமான் கடல் பகுதியில் இந்தியா – தாய்லாந்து கடற்படைகளின் 3 நாள் கூட்டு ரோந்து நடவடிக்கை தொடங்கியது. இந்திய கடல் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் சூழலில், பிராந்திய கடல் பகுதி பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து குவாட் கூட்டமைப்பை உருவாக்கி, இந்தியப்பெருங்கடல் பகுதியில் கூட்டு போர்ப்பயிற்சி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக, சாகர் திட்டத்தின்கீழ் தாய்லாந்து நாட்டு கடற்படையுடன் இணைந்து கூட்டு ரோந்து பணியையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான கூட்டு ரோந்து நடவடிக்கை தொடங்கியது. இதுகுறித்து இந்திய கடற்படை செய்தித்தொடர்பாளர் விவேக் மத்வால் கூறியதாவது: இந்தியப்பெருங்கடல் பகுதியின் பாதுகாப்பு மற்றும் சர்வதேச வர்த்தக கப்பல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், இந்தியா – தாய்லாந்து இரு நாட்டு கடற்படைகளும் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் அவற்றின் சர்வதேச கடல் எல்லையை ஒட்டியப் பகுதிகளில் ஆண்டுக்கு இரு முறை 'CORPAT' என்ற கூட்டு ரோந்துப்பணியை மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான 31ஆவது பகுதி கூட்டு ரோந்து அந்தமான் கடல் பகுதியில் தொடங்கியது.

இந்த 3 நாள்கள் கூட்டு ரோந்து நடவடிக்கையில் இந்திய கடற்படையின் ரோந்து கப்பலான INS சூர்யா, தாய்லாந்தின் கிரபி போர் கப்பல் ஆகியவை டோனியர் போர்விமானத்துடன் ரோந்து நடவடிக்கையில் பங்கேற்றுள்ளன. கடல்சார் சட்டவிரோத நடவடிக்கைகள், சட்டவிரோதமாக மீன்பிடித்தல், போதைப்பொருள் கடத்தல், கடல்சார் சுற்றுலா, கடற்கொள்ளை ஆகியவற்றைத் தடுப்பதே இந்த CORPAT கூட்டு ரோந்தின் முக்கிய நோக்கம் ஆகும். இது கடல்வழியாக சட்டவிரோதமான குடியேறுதல்களைத் தடுக்கவும், கடல்பகுதியில் தேடுதல் மற்றும் மீட்புப்பணிகளுக்கும் இந்தத்திட்டம் பெரும் உதவியாக உள்ளது.

**5. பிட்காயினை சட்டப்பூர்வ நாணயமாக அங்கீகரித்தது எல் சால்வடார்**

மெய்நிகர் நாணயமான பிட்காயினை பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சட்டப்பூர்வ நாணயமாக மத்திய அமெரிக்க நாடான எல் சால்வடார் அங்கீகரித்துள்ளது. இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ள முதல் நாடு எல் சால்வடார்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

**6. தமிழ்நாட்டில் கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்க "ஆபரேஷன் விண்ட்": காவல்துறை நடவடிக்கை**

தமிழகத்தில் கள்ளச்சாராயம் தயாரிக்கப்படுவதை தடுக்கும் வகையில் "ஆபரேஷன் விண்ட்" (Operation Wind) என்ற பெயரில் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளனர். கரோனா தொற்றைத் தடுக்கும் வகையில் முழு பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டிருப்பதால், கடந்த மாதம் 10ஆம் தேதி முதல் டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால் சட்டவிரோதமாக மதுபானம் விற்கப்படுவது அதிகரித்துள்ளது. குறிப்பாக மாநிலத்தில் மலைப்பகுதிகள், வனப் பகுதிகளில் கள்ளச்சாராயம் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகிறது. அதேபோல கர்நாடகம், ஆந்திரம், புதுச்சேரி மாநிலங்களிலிருந்து மதுபாட்டில்கள் கடத்தி கொண்டுவரப்பட்டு, அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இதைத்தடுப்பதற்கு காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கள்ளச்சாராயம் குறித்து தகவல் தெரிந்தால் பொதுமக்கள் 10581 என்ற தொலைபேசி எண்ணிலும், 9498410581 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம் என தமிழ்நாட்டின் காவல்துறையின் மதுவிலக்குப்பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

**1.** **"தியான்ஜோ –2" என்பது எந்த நாட்டின் விண்கலமாகும்?**

அ) ஜப்பான்

ஆ) ரஷ்யா

**இ) சீனா ☑**

ஈ) தென் கொரியா



✓ தியான்ஜோ–2 அல்லது "Heavenly Vessel" என்பது சீனாவின் சரக்கு கொண்டுசெல்லும் விண்கலமாகும். அது சீனாவால் உருவாக்கப்பட்டுவ–ரும் விண்வெளி நிலையத்திற்கு பொருட்கள், உபகரணங்கள் போன்ற–வற்றை எடுத்துச்சென்றது. அது, அவ்விண்வெளி நிலையத்தின் ஒரு பகுதியாக இருக்கும் டியான்ஹே தொகுதியுடன் வெற்றிகரமாக இணை–க்கப்பட்டது. லாங் மார்ச்–7 Y3 ஏவுகணையைப் பயன்படுத்தி புவியில் இருந்து அவ்விண்கலம் ஏவப்பட்டது.

---

**2.** **பூஜா இராணி போராவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) டேபிள் டென்னிஸ்

**ஆ) குத்துச்சண்டை ☑**

இ) தடகளம்

ஈ) வில்வித்தை



✓ துபாயில் நடந்துவரும் ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய குத்துச்சண்டை வீராங்கனை பூஜா இராணி போரா தனது இர–ண்டாவது கண்ட அளவிலான பட்டத்தை வென்றுள்ளார். உஸ்பெகிஸ்–தானின் மவ்லுடா மோவ்லோனோவாவுக்கு எதிராக 75 கிகி பிரிவில் 5–0 என்ற கோல் கணக்கில் அவர் வெற்றியை பதிவுசெய்தார்.

---

**3.ஆண்டுதோறும் உலக நலவாழ்வமைப்பால், 'உலக புகையிலை ஒழிப்பு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

அ) மே.29

ஆ) மே.30

**இ) மே.31 ☑**

ஈ) ஜூன்.01




✓ ஆண்டுதோறும் மே.31ஆம் தேதியை, உலக நலவாழ்வு அமைப்பு (WHO) "உலக புகையிலை ஒழிப்பு நாள்" எனக்கொண்டாடுகிறது. "Commit to quit" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருள் ஆகும். புகையிலை தொற்று மற்றும் புகையிலையைப் பயன்படுத்துவதா–ல் ஏற்படும் இறப்புகள் குறித்து உலகளாவிய கவனத்தை ஈர்க்க, 1987 ஆம் ஆண்டில் WHO உறுப்பினர்களால் இந்த நாள் உருவாக்கப்பட்டது.

✓ 1988ஆம் ஆண்டு மே.31 அன்று புகையிலை ஒழிப்பு நாளாக கொண்டாட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

**4.ECLGS 4.0'இல், பின்வரும் துறைகளுள் எது சேர்க்கப்பட்டுள்ளது?**

**அ) உள்நாட்டு வான் போக்குவரத்து ☑**

ஆ) வேளாண்மை

இ) கட்டுமானம்

ஈ) கப்பல் கட்டுமானம்




✓ ஒன்றிய அரசானது அவசரகால கடனுறுதித் திட்டம் 4.0'ஐ அறிமுகப்படுத்–தியுள்ளதுடன், உள்நாட்டு வான் போக்குவரத்துத்துறையையும், உள்ள–க உயிர்வளி உற்பத்திசெய்யும் நலவாழ்வு நிறுவனங்களுக்கு கடனளி–ப்பதையும் திட்டத்தின் நோக்கமாக விரிவுபடுத்தியுள்ளது.

✓ ECLGS 4.0'இன்கீழ் நிலுவையில் உள்ள கடனில் அதிகபட்சமாக 40% கடன் அல்லது ₹200 கோடி எது குறைவாக உள்ளதோ அதனை நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெறுபவர்களால் பெறமுடியும்.

---

**5.** **ESIC மற்றும் EPFO திட்டங்களைச் செயல்படுத்துகிற ஒன்றிய அமைச்சகம் எது?**

அ) நிதி அமைச்சகம்

**ஆ) தொழிலாளர் அமைச்சகம் ☑**

இ) MSME அமைச்சகம்

ஈ) சமூக நீதி அமைச்சகம்

✓ ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது ESIC மற்றும் EPFO திட்டங்களின்கீழ் இணைக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அவர்களின் குடும்பத்தின் நலவாழ்வுகுறித்த அச்சத்தையும் கவலையை–யும் நீக்கும் விதமாக கூடுதல் பயன்களை அறிவித்துள்ளது.

✓ இப்புதிய நன்மைகளின்படி, COVID காரணமாக ஓர் ஊழியர் இறந்தால், பணியின்போதான காயத்தால் ஏற்படும் இறப்பின் கிடைக்கப்பெறும் அதே நன்மைகளைப்போன்று, காப்பீடு செய்யப்பட்ட நபரின் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் பயன்கள் வழங்கப்படும்.

---

**6.** **பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் குழந்தைகளுக்கான அவசரகால உதவி எண் என்ன?**

அ) 1075

**ஆ) 1098 ☑**

இ) 1091

ஈ) 14567

✓ ஒன்றிய அரசின் உதவி எண்கள்பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும்படி தனியார் பொழுதுபோக்கு அலைவரிசைகளுக்கு மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ஆலோசனை வழங்கியுள்ளது.

✓ ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் உதவி எண் – 1075, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் உதவி எண் – 1098, சமூகநீதித்துறையின் மூத்த குடிமக்களுக்கான உதவி எண் – 14567, நிம்ஹன்ஸ் அமைப்பின் உளவியல் ஆதரவு உதவி எண் – 08046110007 ஆகியவற்றை தனியார் பொழுதுபோக்கு அலைவரிசைகள், தாங்கள் ஒளிபரப்பும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கிடையே ஒளிபரப்பி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

---


**7.** **NASA'இன் கியூரியாசிட்டி ஆய்வூர்தி, எந்த வான்பொருளில் அமைந்துள்ள கேல் பள்ளத்தின் மீதிருந்த மேகங்களைப் படம்பிடித்து உள்ளது?**

அ) வியாழன்

**ஆ) செவ்வாய் ☑**

இ) திங்கள்

ஈ) வெள்ளி



✓ NASA'இன் கியூரியாசிட்டி ஆய்வூர்தியானது செவ்வாய் கிரகத்தின் கேல் பள்ளத்திற்கு மேல் காணப்பட்ட மேகங்களைப் படம்பிடித்துள்ளது. 154 கிமீ விட்டம்கொண்ட இப்பள்ளம், சுமார் 3.5–3.8 பில்லியன் ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப்பட்டுள்ளது. கேல் பள்ளத்தின் மீது உலவும் விசித்திரவகை மேகங்கள்குறித்து ஆய்வுசெய்வதற்காக, கியூரியாசிட்டி ஆய்வூர்தியால் சமீபத்தில் எடுக்கப்பட்ட 21 தனித்தனி நிழற்படங்களின் கலவைதான் இந்த நிழற்படம்.

---

**8.** **உலகின் முதல் 'நானோ யூரியா'வை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?**

**அ) IFFCO ☑**

ஆ) தேசிய உரங்கள் நிறுவனம்

இ) இராஷ்டிரிய இரசாயனங்கள் மற்றும் உரங்கள்

ஈ) சம்பல் உரங்கள்

✓ உலக உழவர்களுக்காக உலகின் முதல் நானோ யூரியா திரவத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக இந்திய உழவர்கள் உர கூட்டுறவு நிறுவனம் (IFFCO) தெரிவித்துள்ளது. கலோலில் உள்ள நானோ பயோடெக்னாலஜி ஆராய்ச்சி மையத்தில் இந்தத் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டது.

✓ இது, உழவர்களின் உள்ளீட்டு செலவைக்குறைக்கும் என எதிர்பார்க்கப்–படுகிறது. மேலும் இது, போக்குவரவு மற்றும் கிடங்கிற்கான செலவினத்–தை கணிசமாகக் குறைக்கும்.

---

**9.** ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியானது NGC 691'இன் விவரமான நிழற்படத்தை எடுத்துள்ளது. NGC 691 என்பது ____?



**அ) பேரடை ☑**

ஆ) எரிகல்

இ) மேகம்

ஈ) புறக்கோள்

✓ NASA / ESA ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியானது NGC 691 எனப்படும் சுழல் பேரடையின் தெளிவான நிழற்படத்தை எடுத்துள்ளது. NGC 691 என்பது மேஷ விண்மீன் மண்டலத்தில், சுமார் 125 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ள ஒரு சுழல் பேரடை ஆகும். இது மாறுபட்ட வடிவங்கள் மற்றும் வண்ணங்கள் கொண்ட ஒன்பது பேரடைகளின் தொகுப்பான NGC 691 குழுவின் மூத்த உறுப்பினராகும்.

---

**10.** உலக மூளைக்கட்டி நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?




**அ) ஜூன் 8 ☑**

ஆ) ஜூன் 10

இ) ஜூன் 12

ஈ) ஜூன் 14

✓ உலக மூளைக்கட்டி நாளானது ஆண்டுதோறும் ஜூன்.8 அன்று உலகம் முழுமைக்கும் அனுசரிக்கப்படுகிறது. மூளைக்கட்டி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அதுகுறித்து மக்களுக்கு அறிவுறுத்துவதும் இந்த நாளின் நோக்கமாகும். உலக மூளைக்கட்டி நாளை, தொடக்கத்தில், லீப்ஜிக்கைச்சார்ந்த இலாபநோக்கற்ற அமைப்பான ஜெர்மன் மூளைக்கட்டி சங்கம் கடந்த 2000ஆம் ஆண்டில் நியமித்து அறிவித்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நீட் தேர்வின் தாக்கம்: நீதிபதி ஏ கே ராஜன் குழுவில் 8 உறுப்பினர்கள் நியமனம்**

தமிழ்நாட்டில் மருத்துவ மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வின் பாதிப்பு குறித்து ஆய்வுசெய்ய நீதியர்சர் ஏ கே ராஜன் தலைமையிலான உயர் நிலைக் குழுவில் மேலும் 8 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக்குழு, உரிய புள்ளி விவரங்களை ஆய்வு செய்து, தமிழ்நாட்டிலுள்ள பின்தங்கிய மாணவர்களின் நலனைப் பாதுகாத்திடத் தேவையான பரிந்துரைகளை ஒருமாதகாலத்திற்குள் அரசுக்கு அளிக்கும். இந்தப்பரிந்துரைகளை ஆய்வுசெய்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.

---

**2. 2020–21 நிதியாண்டில் வேளாண் ஏற்றுமதியில் முன்னேற்றம்: மத்திய அரசு தகவல்**

கடந்த மூன்று ஆண்டுகளாக தேக்கத்தில் இருந்த வந்த வேளாண் மற்றும் அது சார்ந்த பொருள்களின் ஏற்றுமதியில் 2020–21 நிதியாண்டு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வர்த்தகத்துறை தெரிவித்துள்ளது.

வேளாண் ஏற்றுமதி கடந்த 2017–18 நிதியாண்டில் 38.43 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. 2018–19–இல் கிட்டதட்ட இதே அளவில் தொடர்ந்தது. ஆனால், 2019–20–இல் 35.16 பில்லியன் அமெரிக்க டாலராக ஏற்றுமதி குறைந்தது. அதே சமயத்தில் நோய்த் தொற்று சிக்கல்கள் நிறைந்த 2020–21 நிதியாண்டில் இது 41.25 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது. இது 17.34% வளர்ச்சியாகும். இதில் வேளாண் மற்றும் தோட்டப்பொருள்கள், கடல்சார் பொருள்களும் அடக்கம் என தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மத்திய அரசின் வர்த்தகத் துறை செயலர் டாக்டர் அனூப் வாதவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வேளாண் ஏற்றுமதியில் முந்தைய நிதியாண்டுகளைவிட தற்போது நாடு வளர்ச்சியைக்கண்டுள்ளது. ஏற்றுமதியின் இந்திய மதிப்பில் இது 2021–21 நிதியாண்டில் ₹3.05 இலட்சம் கோடியாகும். முந்தைய 2019–20'இல் ₹2.49 இலட்சம் கோடியாக இருந்தது. 2020–21'இல் 22.62% வளர்ச்சி பெறப்பட்டுள்ளது.

இறக்குமதியிலும் கிட்டதட்ட முந்தைய நிதியாண்டை போன்று 2020–21–இல் 20.67 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. நோய்த்தொற்று காலக்கட்டத்தில் வேளாண் பொருள்கள் வர்த்தக சமநிலை (ஏற்றுமதி – இறக்குமதி இடையேயான வேறுபாடு) 14.51 பில்லியன் டாலரிலிருந்து 20.58 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இதிலும் 42.16 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளோம். 2020–21'இல் ஏற்றுமதியில் கடல்சார் பொருள்கள் தவிர்த்து வேளாண் பொருள்கள் மட்டும் 28.3 சதவீதம் வளர்ச்சியைப் பெற்று 29.81 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

உலக நாடுகளில் இந்திய தானியங்கள், பாஸ்மதி அல்லாத அரிசித் தேவை அதிகரித்துள்ளது. இதில் 4,794.54 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கோதுமையும் 549.19 மில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மற்ற வேளாண் பொருள்களில் சர்க்கரை, பருத்தி, புண்ணாக்கு, காய்கறிகள், சமையல் எண்ணெய் போன்றவையும் ஏற்றுமதி செய்யப்பட்டு கணிசமான வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

இஞ்சி, மிளகு, பட்டை, ஏலக்காய், மஞ்சள், குங்குமப்பூ போன்ற மசாலா பொருள்களின் ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி கண்டுள்ளோம். 2020–21'இல் மசாலா பொருள்களின் ஏற்றுமதி இதுவரை இல்லாத அளவுக்கு 4 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டியுள்ளது.

இயற்கை உரங்களுடன் தயாராகும் இந்திய கரிம வேளாண் பொருளின் ஏற்றுமதி 2020–21'இல் 1,040 மில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது. இதன் வளா்ச்சி 50.94 சதவீதமாகும். மாம்பலம், வாழைப்பழம், ஆரஞ்சு, சிகப்பு வெங்காயம், திராட்சை போன்றவை நமது நாட்டில் விளையும் புகழ்பெற்ற பகுதியிலிருந்து அனுப்பப்படுவதைப் போன்று, முதன் முறையாக குறிப்பிட்ட சில பகுதிகளிலிருந்து சில குறிப்பிட்ட பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இரும்புச்சத்து நிறைந்த அஸ்ஸாம் சிவப்பரிசி, கும்பகோணம் கிராம அரிசி, ஹிமாச்சல பிரதேசம், உத்தரக்கண்ட் ஆகிய மாநிலங்களில் உள்ள சில தானிய வகைகளும் இதில் அடங்கும்.

இந்திய வேளாண் பொருள்களுக்கு அமெரிக்கா, சீனா, வங்கதேசம், ஐக்கிய அரபு அமீரகம், வியட்நாம், சவூதி அரேபியா, இந்தோனேஷியா, நேபாளம், ஈரான், மலேசியா ஆகிய நாடுகளில் வரவேற்புள்ளது. இந்தோனேஷியாவுக்கான ஏற்றுமதியில் 102.42 சதவீத வளர்ச்சி கண்டு முன்னிலை பெற்றுள்ளோம். அடுத்து வங்கதேசத்துடன் 95.93 சதவீதம், நேபாளத்துடன் 50.49% ஏற்றுமதி வளர்ச்சியை இந்தியா கண்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

**3. கரோனா தடுப்பூசி விரயம்: ஜார்க்கண்ட் முதலிடம்**

கரோனா தடுப்பூசியை வீணடிக்கும் மாநிலங்கள் பட்டியலில் 33.95 சதவீத விரயத்துடன் ஜார்க்கண்ட் மாநிலம் முதலிடம் வகிக்கிறது.

நாட்டிலேயே மிகக்குறைந்த அளவில் தடுப்பூசிகளை விரையம் செய்யும் மாநிலங்களாக கேரளமும் (–6.37), மேற்கு வங்கம் (–5.48) என்ற எதிர் மறை புள்ளிகளைக்கொண்டிருப்பதாக மத்திய அரசின் மே மாதத்துக்கான புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கரோனா தடுப்பூசிகளை வீணடிப்பதில் ஜார்க்கண்டுக்கு (33.95%) அடுத்த இடத்தில் 15.79% விரயத்துடன் சத்தீஸ்கர் உள்ளது.

மத்திய பிரதேசம் 7.35 சதவீத அளவிலும், பஞ்சாப் 7.08 சதவீதம், தில்லி 3.95 சதவீதம், ராஜஸ்தான் 3.91 சதவீதம், உத்தர பிரதேசம் 3.78 சதவீதம், குஜராத் 3.63%, மகாராஷ்டிரம் 3.59% என்ற அறவில் தடுப்பூசியை மே மாதத்தில் வீணடித்துள்ளன.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மே மாதத்தில் மொத்தம் 7.9 கோடி தடுப்பூசி டோஸ்கள் விநியோகிக்கப்பட்டதில் 6.1 கோடி டோஸ்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், முந்தைய ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது, மே மாதத்தில் குறைந்த எண்ணிக்கையிலேயே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 9.02 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட நிலையில், மே மாதம் 8.98 கோடி தடுப்பூசிகள் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஜூன்.7ஆம் தேதி முதல் அனுமதிக்கப்பட்ட 45 வயதுக்கு மேற்பட்ட பயனாளிகளில் நாடு முழுவதும் 38 சதவீதம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் திரிபுரா 92 சதவீதத்துடன் முதலிடம் வகிக்கிறது. ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களில் 45 வயதுக்கு மேற்பட்ட பிரிவினரில் தலா 65% பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

குஜராத்தில் 53 சதவீதம் பேருக்கும், கேரளத்தில் 51 சதவீதம் பேருக்கும், தில்லியில் 49 சதவீதம் பேருக்கும், பிகாரில் 25% பேருக்கும், ஜார்க்கண்ட், உத்தர பிரதேச மாநிலங்களில் தலா 24% பேருக்கும் செலுத்தப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையில் தமிழிகநாடு மிகவும் பின்தங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் 45 வயதுக்கு மேற்பட்ட பிரிவினரில் 19 சதவீதம் பேருக்கு மட்டுமே முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

---

**4. G7 உச்சிமாநாடு: பிரதமர் நாளை பங்கேற்பு**

G7 உச்சிமாநாட்டில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் (ஜூன்.12, 13) பிரதமர் நரேந்திர மோடி காணொலி முறையில் பங்கேற்கிறார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சனின் அழைப்பை ஏற்று இந்த நிகழ்ச்சியில் மோடி கலந்து கொள்கிறார். G7 நாடுகள் அமைப்புக்கு தற்போது பிரிட்டன் தலைமையே –ற்றுள்ளது. இந்தியா, ஆஸ்திரேலியா, தென்கொரியா மற்றும் தென்னாப் –பிரிக்கா ஆகிய நாடுகளை விருந்தினர்களாக G7 உச்சிமாநாட்டுக்கு பிரிட்டன் பிரதமர் அழைத்துள்ளார். நேரடி & காணொலி முறைகளில் மாநாடு நடைபெறும்.

"சிறப்பான முறையில் மீண்டும் கட்டமைப்போம்" என்பது இந்த உச்சி மாநாட்டின் மையப்பொருளாகும். கரோனாவிலிருந்து சர்வதேச அளவில் மீண்டு வருங்காலத்தில் பெருந்தொற்றுகளுக்கு எதிரான நடவடிக்கைக –ளை வலுப்படுத்துதல்; சுதந்திரமான மற்றும் நியாயமான சர்வதேச வர்த்தகத்துக்கு ஆதரவளித்து எதிர்கால வளத்தை ஊக்கப்படுத்துதல்; பருவநிலை மாற்றத்தை திறம்பட எதிர்கொண்டு பூமியின் பல்லுயிர்ப் பெருக்கத்தை காத்தல்; மற்றும் சர்வதேச அளவில் பகிர்ந்துகொள்ளும் மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படையான சமூகங்களை ஊக்குவித்தல் ஆகிய 4 கருத்துகளை முன்னிலைப்படுத்தி உச்சிமாநாட்டு ஆலோச –னைகளை பிரிட்டன் வகுத்துள்ளது.

கரோனா தொற்றிலிருந்து உலகம் விடுபடுவதற்கான வழிமுறைகள் குறித்த கருத்துகளை தலைவர்கள் பரிமாறிக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. G7 கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்பது இது இரண்டாவது முறையாகும். பிரான்ஸ் தலைமையில் அந்நாட்டின் பியாரி –ட்ஸ் நகரத்தில் 2019'இல் நடைபெற்ற உச்சிமாநாட்டில் "நல்லெண்ண பங்குதாரராகப் பங்கேற்ற பிரதமர் மோடி, "பருவநிலை, பல்லுயிர்ப் பெருக்கம் & கடல்கள்" மற்றும் "டிஜிட்டல் மாற்றம்" ஆகிய அமர்வுகளில் கலந்துகொண்டார்.

---

**5. 'என்–95'க்கு மாற்றாக 'எஸ்எச்ஜி–95' வீரியமிக்க மலிவு விலை முகக்கவசம்**

தீநுண்மி, நுண்ணிய கிருமிகளிடமிருந்து 99% வரை பாதுகாக்கும் வீரியமிக்க மலிவு விலை முகக்கவசங்களை இந்திய நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன. மறு உபயோகத்துக்குப் பயன்படாத 'என்–95' முகக் கவசங்களுக்கு மாற்றாக இது உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய அறிவிய –ல் தொழில்நுட்பத் துறை தெரிவித்துள்ளது.

கரோனா நோய்த்தொற்றிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்க உலக சுகா –தார அமைப்பு பரிந்துரையின்படி கிருமிநாசினிகளும், முகக்கவசங்களு –ம் முக்கிய பங்கு வகித்தன. மருத்துவர்களும் கரோனா நோய்த் தொற்றில் பாதிக்கப்பட்டவர்களும் பயன்படுத்தி வந்த 'என்–95' முகக் கவசங்களால் நோய்த்தொற்று இல்லாதவர்களுக்கு தொற்றுபரவலில் மிகுந்த பாதுகாப்பாகக் கருதப்பட்டது. அதேசமயத்தில் இதன் விலை மற்றும் மறு உபயோகமின்மை போன்ற அசௌகரியங்கள் இருந்தன.

இவற்றைப் போக்கும் விதமாக COVID–19 நிதித்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் உயிரிதொழில்நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவிக் கவுன்சில், ஐகேபி நாலேஜ் பார்க் போன்ற அமைப்புகள், ஹைதராபாத்தில் உள்ள பரிசோதா டெக்னாலஜிஸ் என்கிற தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு வழங்கிய தொழில்நுட்ப உதவிகள்மூலம் 'SHG–95' என்கிற வீரியமிக்க பல அடுக்கு முகக்கவசம் தயாரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை தெரிவித்துள்ளது.

---

**6. கழிவுநீரில் கரோனா தீநுண்மி இருப்பதைக் கண்டறியும் குறைந்த விலை உணரி**

கழிவுநீரில் கரோனா தீநுண்மி இருப்பதைக் கண்டறியும் குறைந்த விலையிலான உணரி தொழில்நுட்பத்தை பிரிட்டன்–இந்திய விஞ்ஞா –னிகள் கூட்டாக உருவாக்கியுள்ளனர். அதிக மக்கள் நெருக்கம் உள்ள பெரிய பகுதிகளில் நோய்த்தொற்று எந்த அளவில் பரவியிலிருக்கிறது என்பதை சுகாதார அதிகாரிகள் சிறந்த முறையில் புரிந்துகொள்ள இந்த தொழில்நுட்பம் உதவும்.

இதனைப் பயன்படுத்த ஆய்வக வசதிகளோ, விலை உயர்ந்த ரசாயனமோ இதற்கு தேவைப்படாது. எளிதாக கையில் எடுத்துச் செல்லக் கூடிய வகையிலான இந்த தொழில்நுட்பம், குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய் நாடுகளுக்கு நோய்த் தொற்று பரவலைக் கண்டறிய இந்த தொழில்நுட்பம் மிகுந்த உதவிகரமாக இருக்கும் என்கின்றனர் ஆராய்ச்சியாளார்கள். பிரிட்டனைச்சேர்ந்த ஸ்டிராத்கிளைட் பல்கலைக்க –ழக மற்றும் மும்பை IIT ஆராய்ச்சியாளர்கள் இணைந்து உருவாக்கிய இந்த சென்ஸார் தொழில்நுட்பம் தொடர்பான ஆய்வுக்கட்டுரை, 'சென்ஸா –ர்ஸ் & ஆக்சுவேடர்ஸ் பி கெமிக்கல்' ஆய்விதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக மும்பையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையில் இருந்து கழிவுநீர் சேகரிக்கப்பட்டு அதனுடன் SARS CoV–2 ரிபோநியூக் –ளிக் அமிலத்தை கலந்து, அதில் இந்த சென்ஸார் தொழில்நுட்பத்தை பரிசோதித்துள்ளனர்.

---

**1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தம், நியூசிலாந்துக்கும் எந்நிறுவனத்துக்கும் இடையேயான விண்வெளி ஆய்வுக்கான ஒப்பந்தமாகும்?**

அ) ROSCOSMOS

ஆ) ISRO

**இ) NASA ☑**

ஈ) ESA

✓ நியூசிலாந்து, NASA உடனான விண்வெளி ஆய்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன்மூலம், ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் பதினொன்றாவது நாடாக நியூசிலாந்து திகழ்கிறது. வரும் 2024ஆம் ஆண்டளவில் மனிதர்களை நிலவுக்கும், மேலும் செவ்வாய் கோளுக்கும் அனுப்பும் திட்டத்தின் ஒருபகுதியாக NASA உடனான இந்த ஒப்பந்தம் உள்ளது.

---

**2. அண்மையில் அறிவிக்கப்பட்ட H10N3 என்பது எதன் திரிபு?**



**அ) பறவைக்காய்ச்சல் ☑**

ஆ) கொரோனா வைரஸ்

இ) ஆந்த்ராக்ஸ்

ஈ) பன்றிக்காய்ச்சல்

✓ H10N3 எனப்படும் அரிய பறவைக்காய்ச்சலின் முதல் மனித நோய்த்தொற்றை சீனா தெரிவித்துள்ளது. இந்தப்பாதிப்பு, 41 வயதுடைய நபருக்கு ஏற்பட்டுள்ளதாக சீனாவின் தேசிய சுகாதார ஆணையத்தால் உறுதிப்படுத்தியுள்ளது.

✓ இப்பறவைக்காய்ச்சல் திரிபானது குறைந்த நோய்ப்பரவல் தன்மையை கொண்டுள்ளது. அதாவது ஒப்பீட்டளவில் கோழிப்பண்ணையில் ஏற்படுத்தும் தொற்றைவிட குறைவான தொற்றையே இது ஏற்படுத்துகிறது. உலகில் வேறெங்கும் இது பாதித்ததாக இதுவரை பதிவாகவில்லை.

---

**3. 'Ecowrap' என்ற பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ள வங்கி எது?**

**அ) பாரத வங்கி ☑**

ஆ) பஞ்சாப் தேசிய வங்கி

இ) ஆக்ஸிஸ் வங்கி

ஈ) HDFC வங்கி

✓ பாரத வங்கி (SBI) தனது பொருளாதார ஆய்வறிக்கையான 'Ecowrap'இல் 2021-22 நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.9%ஆக உயரும் எனக் கணித்துள்ளது. முன்னர் இவ்வறிக்கை 10.4% வளர்ச்சி இருக்கும் எனக் கணித்திருந்தது. COVID-19 தொற்றுநோயின் இரண்டாம் அலையின் காரணமாக கணிப்பில் சரிவு ஏற்பட்டுள்ளது.

---

**4. ஜப்பானிய வீராங்கனை நவோமி ஒசாகாவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) பூப்பந்து

**ஆ) டென்னிஸ் ☑**

இ) வில்வித்தை

ஈ) பளு தூக்குதல்

✓ முன்னணி டென்னிஸ் சாம்பியனும், உலகின் நெ.2 வீராங்கனையுமான நவோமி ஒசாகா, பிரெஞ்சு ஓபன் போட்டியிலிருந்து விலகுவதாகவும், களத்திலிருந்து சிறிதுகாலம் விலகியிருக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். மனநல காரணங்களுக்காக, போட்டிக்கு பிந்தைய பத்திரிகையாளர் சந்திப்புகளை புறக்கணிப்பதாக அவர் பதிவிட்டிருந்தார். இதையொட்டி, போட்டி அமைப்பாளர்கள் அவருக்கு அபராதம் விதித்தனர்.

---

**5. நடப்பாண்டின் உலக பால் நாளுக்கான கருப்பொருள் என்ன?**




**அ) Sustainability in the dairy sector ☑**

ஆ) Milk for All

இ) Leaving No one Behind

ஈ) Milk and SDG

✓ ஒவ்வோர் ஆண்டும் ஜூன்.1 அன்று, ஐநா அவையின் உணவு & உழவு அமைப்பு உலக பால் நாளை அனுசரிக்கிறது. உலகளாவிய உணவாக பாலின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்கும், பால் தொழிற்துறையை போற்றுவதற்குமாக, இந்நாள், முதன்முதலில் கடந்த 2001ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. "Sustainability in the dairy sector" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**6. கோவா குறித்த அண்மைய செய்திகளின் சூழலில், 'GIFT' என்ற சுருக்கம் பின்வரும் எதைக்குறிக்கிறது?**

**அ) Goa Institution For Future Transformation ☑**

ஆ) Goa Institution For Financial Transformation

இ) Goa Institution For Fin Tech

ஈ) Goa Institution For Foreign Affairs

✓ கோவா மாநில அரசானது Goa Institution For Future Transformation (GIFT) என்ற பெயரில் ஒரு மதியுரையகத்தை அமைத்துள்ளது. இந்த நிறுவனம், கொள்கைசார்ந்த பல்வேறு விஷயங்கள் மற்றும் நலன்புரி முடிவுகளில் கோவா மாநில அரசுக்கு உதவும், அறிவுறுத்தும் மற்றும் வழிகாட்டும். GIFT இன் செயல்பாடுகள் NITI ஆயோகின் செயல்பாடுகளுக்கு மிகவும் ஒத்ததாக இருக்கும்.

---

**7. தற்போதைய இரண்டு குழந்தைகள் வரம்பை மீறி, சமீபத்தில், 3 குழந்தைகளுக்கான கொள்கையை கொண்டுவந்துள்ள நாடு எது?**



அ) இந்தியா

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இ) ஜப்பான்

**ஈ) சீனா ☑**

✓ கடந்த 2016ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தற்போதைய இரண்டு குழந்தைகள் வரம்பைமீறி, தம்பதியினர் மூன்று குழந்தைகளைப் பெற அனுமதிப்பதாக சீனா அறிவித்துள்ளது. நாட்டின் பிறப்பு விகிதங்கள் சரிவை பதிவுசெய்துள்ளதை அடுத்து சீன அரசாங்கத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

---

**8. நடப்பாண்டின் (2021) P4G உச்சிமாநாட்டை நடத்திய நாடு எது?**

அ) இந்தியா

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**இ) தென் கொரியா ☑**

ஈ) வட கொரியா

✓ P4G – Partnering for Green Growth and the Global Goals – 2030 உச்சிமாநாட்டை கொரிய குடியரசு / தென் கொரியா நடத்தியது. அது சியோலில் நடத்தப்பட்டது.

✓ நீடித்த மற்றும் நெகிழ்வான பொருளாதாரங்களை உருவாக்குவதற்காக சந்தை அடிப்படையிலான கூட்டாண்மைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்வு இதுவாகும். "Inclusive Green Recovery Towards Carbon Neutrality" என்பது இந்த நிகழ்வின் கருப் பொருளாகும்.

---

**9. "தோட்டக்கலை தொகுதி மேம்பாட்டு திட்டத்தை" செயல்படுத்தும் நிறுவனம் எது?**

அ) உணவு மற்றும் உழவு அமைப்பு

**ஆ) தேசிய தோட்டக்கலை வாரியம் ☑**

இ) NABARD

ஈ) உணவுப்பதப்படுத்துதல் தொழிற்சாலைகள் அமைச்சகம்

✓ மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், "தோட்டக்கலை தொகுதி மேம்பாட்டு திட்டத்தை" தொடங்கிவைத்தார். இந்தத் திட்டம், 11 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய 12 தொகுதிகளில் முன்னோட்ட அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட தோட்டக்கலை தொகுதிகளை உலகளாவிய போட்டிக்கு உட்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ள இந்தத் திட்டம் தேசிய தோட்டக்கலை வாரியத்தால் செயல்படுத்தப்படுகிற ஒரு மத்திய துறை திட்டமாகும்.

---


**10.** COVID–19 பின்னணியில், 'கப்பா' & 'டெல்டா' என்றால் என்ன?

அ) COVID பரவலுக்கு எதிரான புதிய நடவடிக்கை

**ஆ) COVID திரிபுகளுக்கான புதிய பெயர்கள் ☑**

இ) COVID பாதிப்பு விகிதத்தில் புதிய வகைப்பாடு

ஈ) புதிய உலகளாவிய தடுப்பூசி முன்னெடுப்பு



✓ COVID–19 தொற்றின் பல்வேறு திரிபுகளுக்கு கிரேக்க எழுத்துக்களைப் பயன்படுத்தி புதிய பெயர்களை உலக நலவாழ்வு அமைப்பு அறிவித்துள்ளது. உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி, இந்தியாவில் முதன்முதலில் காணப்பட்ட COVID திரிபு (B.1.617.2) டெல்டா என குறிப்பிடப்படும், அதேசமயத்தில் நாட்டில் முன்னர் காணப்பட்ட திரிபு (B.1.617.1) கப்பா என அறியப்படும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. எழும்பூர் இரயில்நிலையத்தின் 113ஆவது பிறந்தநாள்**

சென்னை எழும்பூர் ரயில்நிலையத்தின் 113ஆவது ஆண்டு பிறந்தநாள் ஜூன்.11 அன்று கொண்டாடப்பட்டது.

**தென்மாவட்டங்களை இணைக்கும்:** சென்னை நகரத்தில் 4 நகரங்களுக்கு இடையேயான இரயில்வே முனையங்களில் ஒன்றாக எழும்பூர் இரயில் நிலையம் திகழ்கிறது. சென்னையை தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களை இணைக்கும் முனையமாக இது உள்ளது.

தென்தமிழ்நாட்டின் நுழைவு வாயிலாக திகழும் இந்த இரயில் நிலையம் ஒரு நூற்றாண்டு கடந்து பல்வேறு சாதனைகளைப் படைத்து, தற்போது கம்பீரமாக காட்சி அளித்து வருகிறது.

**நிலையத்தின் வரலாறு:**

இந்நிலையத்தின் கட்டடப்பணி முடிந்து, 1908 ஜூன்.11 அன்று திறக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தின் பொறியாளராக ஹென்றி இர்வின் இருந்தார். இக்கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்ததாரராக சாமிநாத பிள்ளை என்பவர் செயல்பட்டார். ₹17 இலட்சம் செலவில் 300 அடி நீளம், 71 அடி அகலத்தில் எழும்பூர் ரயில் நிலையத்தின் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டது. தரைத்தளம், முதல்தளத்துடன் இந்தக்கட்டடம் அமைக்கப்பட்டது.

இந்நிலைய கட்டடம் முடிந்த பிறகு, எழும்பூரிலிருந்து தனுஷ்கோடிக்கு போர்ட் மெயில் இரயில் இயக்கப்பட்டது. இந்த இரயில் நிலையத்தில் 3 நடைமேடைகளும், ஒரு நடைமேம்பாலமும் இருந்தது. இதன்பிறகு, பல்வேறு காலகட்டத்தில் வளர்ச்சியடைந்து, இப்போது 11 நடைமேடைகள் இருக்கின்றன. இரயில் நிலையத்தில் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து, மீண்டும் நன்னீராக மாற்றி, நடைமேடை உள்பட பல்வேறு இடங்களில் சுத்தப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் உள்ள 70 இரயில் நிலையங்களுக்கு பயணிகள் வசதிகளுக்காக தலா ₹20 கோடி ஒதுக்கீடு செய்ய இரயில்வே வாரியம் அறிவித்தது.

இதில், எழும்பூர் இரயில் நிலையமும் ஒன்றாகும். பயணிகளின் வசதிக்காக பல்வேறு பணிகள் நடைபெற்று வந்தன. தற்போது கரோனா பொதுமுடக்கம் காரணமாக, பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளன.

**விரைவு இரயில்கள்:** எழும்பூர் இரயில் நிலையத்தில் இருந்து தினமும் 50'க்கும் அதிகமான விரைவு ரயில்கள் இயக்கப்பட்டு வந்தன. இதுதவிர, தாம்பரம்–கடற்கரை மற்றும் செங்கல்பட்டு வரை இயக்கப்படும் 250 மின்சார இரயில்கள் எழும்பூர் இரயில் நிலையம் வழியாக செல்லும்.

விரைவு மற்றும் மின்சார இரயில்களில் பயணம் செய்வதற்காக தினமும் சுமார் 1,20,000 பயணிகள் வந்து செல்வார்கள். இந்த எண்ணிக்கை பண்டிகை காலங்கள், விடுமுறைக்கு ஊருக்கு செல்லும் வேளைகளில் அதிகமாக இருக்கும். தற்போது கரோனா பொதுமுடக்கம் காரணமாக, மின்சார இரயில்கள் மற்றும் சிறப்பு இரயில்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளன.

---

**2. வேளாண் இயந்திரமயமாக்கல்: தமிழ்நாடு, ஆந்திரம் முன்னிலை**

வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் பயன்பெற்ற மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடும் ஆந்திரமும் முன்னிலையில் உள்ளன. இந்தத் திட்டத்தின்மூலம் உழவர்களின் வருமானம் பெருகி, வேளாண் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளித்துள்ளது என மத்திய வேளாண் துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து மத்திய வேளாண்துறை கூறியுள்ளதாவது: சிறு, குறு விவசாயிகளின் வேளாண்மைகளில் இயந்திரமயமாக்கலின் வரம்பை அதிகரிக்கும் நோக்கில் மத்திய வேளாண்துறை 2014–15 நிதி ஆண்டில் 'வேளாண் இயந்திரமயமாக்கல்' என்கிற துணைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. நிலங்களின் பயன்பாடு, நீர்வளங்கள் போன்றவற்றைத் திறம்பட பயன்படுத்தி வேளாண் தொழிலை ஒரு இலாபகரமாக மாற்றுவதிலும் ஊரகப்பகுதி இளைஞர்கள் இந்தத் தொழிலார்வத்துடன் பங்கேற்கவும் இயந்திரமயமாக்கல் முக்கியத்துவம் பெறுகிறது.

வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள், நவீன வேளாண்மைக்கு உரிய உள்ளீடுகள், உயர்தொழில்நுட்பம் மையங்கள், வேளாண் எந்திர வங்கிகள் ஆகியவற்றிற்கு மத்திய அரசு பல்வேறு மாநிலங்களுக்கு நிதியுதவிகளை வழங்கியது. இதன்மூலம் மனித துயரங்கள், சாகுபடிச் செலவுகள் குறைந்து பயிர்களின் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தால் விவசாயிகள் வருமானம் அதிகரித்து வேளாண் பொருளாதார வளர்ச்சி ஊக்கவிக்கப்பட்டுள்ளன.

2014–15 முதல் 2020–21ஆம் ஆண்டு வரை ஆந்திரத்திற்கு ₹621.23 கோடி, தமிழகத்துக்கு ₹421.65 கோடி வேளாண் கூட்டுறவு மற்றும் உழவர்கள் நலத்துறைமூலம் நிதி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு 2021–22 நிதியாண்டில் முதல்தவணையாக ₹21.74 கோடி வேளாண் இயந்திரமயமாக்கல் துணைத்திட்டத்தின்கீழ் தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 269 வேளாண் இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், 115 வேளாண் கருவிகள் வாடகை மையங்கள் அமைக்கப்படும். 10 உயர்தொழில்நுட்ப மையங்கள் மற்றும் 100 விவசாய இயந்திர வங்கிகள் கிராம அளவில் அமைக்கப்படுகின்றன.

இந்த நிதியைப் பெற்ற 11 மாநிலங்களில் கேரளம் ₹89.94 கோடி, உத்தர பிரதேசம் ₹294.74 கோடி பெற்றுள்ளன. குறைவாக பெற்ற மாநிலமாக மேற்கு வங்கம் (₹53.81 கோடி) உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. வண்டலூர் பூங்காவில் குட்டி ஈன்றது சிம்பன்ஸி**

சென்னையை அடுத்த வண்டலூர் உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் சிம்பன்ஸி குட்டி ஈன்றது. வண்டலூர் உயிரியல் பூங்காவில் யானை, சிங்கம், புலி உள்ளிட்ட 2,500'க்கும் மேற்பட்ட வனவிலங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில், கடந்த 2005ஆம் ஆண்டு, சிங்கப்பூர் உயிரியல் பூங்காவிலிருந்து இணை சிம்பன்ஸிகள் வாங்கப்பட்டன. அவ்வாறு வாங்கப்பட்ட கோம்பி (28) என்ற ஆண் சிம்பன்ஸியும், கௌரி (23) என்ற பெண் சிம்பன்ஸியும் நன்முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன.

ஆப்பிரிக்க கண்டத்தில் வாழும் இவ்வகை சிம்பன்ஸியானது அழியும் நிலையில் உள்ளதாக பன்னாட்டு வனவுயிரின பாதுகாப்பு அமைப்பு வரையறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

**4. கருப்புப் பூஞ்சை மருந்துக்கு GST இரத்து:**

கருப்புப்பூஞ்சை தொற்றுக்குப் பயன்படுத்தப்படும் ஆம்போடெரிசின் பி மருந்துக்கு GST ரத்து செய்யப்படுவதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். நிர்மலா சீதாராமன் தலைமையிலான GST கவுன்சில் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பல்வேறு மருத்துவப்பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு ஜிஎஸ்டி குறைக்கப்பட்டுள்ளது. ஆம்போடெரிசின் பி மற்றும் டோசிலிசுமாப் மருந்துகளுக்கு விதிக்கப்பட்டு வந்த 5% GST இரத்து செய்யப்பட்டுள்ளது.

ரெம்டெசிவிர் மற்றும் ஹெபரின் போன்ற மருந்துகளுக்கான ஜிஎஸ்டி 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மருத்துவத்துக்குப் பயன்படுத்தப்படும் உயிர்வளி, உயிர்வளி செறிவூட்டிகள், செயற்கை சுவாச வழங்கி உள்ளிட்ட சாதனங்களுக்கான ஜிஎஸ்டி விகிதம் 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. பல்ஸ் ஆக்சிமீட்டர், சானிடைசர்ஸ், வெப்பபரிசோதனை கருவி உள்ளிட்டவற்றின் ஜிஎஸ்டியும் 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

---

**5. கரோனாவால் உயிரிழந்த பெற்றோரின் குழந்தைகளுக்கு நிதியுதவி: வழிகாட்டி நெறிமுறைகள் வெளியீடு**

கரோனா நோய்த் தொற்றால் உயிரிழந்த அரசு ஊழியர்களின் வாரிசுகள் சிறப்பு நிதித்திட்டத்தின்கீழ் பயன்பெற முடியாது என்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், மற்றவர்கள் இந்த உதவியைப் பெறுவதற்கான வயது வரம்பு 18'க்குக் கீழே இருக்க வேண்டும். கரோனா நோய்த் தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நிதியுதவிகள் வழங்குவது தொடர்பான தனித்த வழிகாட்டு நெறிமுறைகளை சமூக நலன் மற்றும் மகளிர் அதிகாரமளித்தல் துறைக்கான முதன்மைச் செயலாளர் ஷம்பு கல்லோலிகர் வெளியிட்டார். அதன் விவரம்:

கரோனா நோய்த்தொற்றால் பெற்றோர் அல்லது தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைக்கு ₹5 லட்சம் வைப்பீடு செய்யப்படும். இந்தத் தொகை அவர்கள் 18 வயது நிறைவடையும்போது வட்டியோடு சேர்த்து திருப்பித் தரப்படும். ஏற்கெனவே, தாய் அல்லது தந்தையை இழந்து, இப்போது கரோனா நோய்த்தொற்றால் தாய் அல்லது தந்தையை இழந்திருந்தால் அவர்களுக்கும் ₹5 இலட்சம் வைப்பீடு செய்யப்படும். 18 வயது பூர்த்தியா –னவுடன் வட்டியுடன் தொகை அளிக்கப்படும்.

அத்தகைய குழந்தைகளுக்கு அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் இல்லங்கள், விடுதிகளில் சேருவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். குழந்தைகள் கல்லூரிப் படிப்பை முடிக்கும் வரையிலும் அவர்களுக்கான கல்வி மற்றும் விடுதிச் செலவை அரசே ஏற்றுக் கொள்ளும் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வழிகா –ட்டு நெறிமுறைகளை வகுத்திட நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் குழு அண் –மையில் கூடி ஆலோசித்தது. அதன்படி, வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**என்னென்ன நடைமுறைகள்?** கரோனா நோய்த்தொற்று காரணமாக, பெற்றோரை இழந்த குழந்தைகள் முதலில் அடையாளம் காணப்படுவர். இதற்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் தனியாகக்குழு அமைக்கப்படு –ம். மாவட்டங்களில் உள்ள சுகாதாரத்துறைமூலமாக இறப்புச்சான்றிதழ் போன்ற ஆவணங்கள் சரிபார்க்கப்படும். சம்பந்தப்பட்ட ஆவணங்களை வைத்து குடும்பத்தாரிடம் நேரிலும் விசாரணை நடத்தப்படும். கரோனா காரணமாக வீட்டிலேயே பெற்றோரின் இறப்புநேரிடலாம். அப்போது, சம்பந்தப்பட்ட குழந்தையின் பாதுகாவலர் அல்லது தாய் அல்லது தந்தை ஆகியோரில் ஒருவர், தங்களிடம் இருக்கும் மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் இறப்புச்சான்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

கரோனா காரணமாகத்தான் இறந்தார் என்பதற்கான சான்று ஆவணங் –களாக அவை இருக்கவேண்டும். குறிப்பாக, RT–PCR பரிசோதனை, ஸ்கேன், X–கதிர் பரிசோதனை ஆகியவையாக இருக்கலாம்.

**18 வயதுக்குள் இருக்க வேண்டும்:** கரோனா காரணமாக பெற்றோர், தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளின் வயது 18 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும். பெற்றோரை இழந்திருக்கும் பட்சத்தில் ஆண்டுவருமானம் ஏதும் கணக்கில் கொள்ளப்படாமல் சம்பந்தப்பட்ட குழந்தைக்கு அரசு நிதி அளிப்பதுடன், கல்விச்செலவும் ஏற்கப்படும்.

பெற்றோரில் தாய் அல்லது தந்தை இறந்திருக்கும் பட்சத்தில், அந்த நபர் வருமானம் ஈட்டியவராக இருந்தால் அவரது பெயர் வறுமைக் கோட்டுக் –குக்கீழ் உள்ளவர்களின் பட்டியலில் இருக்கிறாரா என ஆராயப்படும். இந்தப் பட்டியல் தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுக் கழகத்திடம் உள்ளது. அந்தப் பட்டியலில் பெயர் இல்லாத பட்சத்தில் வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ளவர்களின் பட்டியலில் இடம்பெறுவதற்கான தகுதி இருக்கிறதா என ஆராயப்பட்டு பட்டியலில் சேர்க்கப்படும்.

**அரசு ஊழியர் குழந்தைகளுக்கு சிறப்பு நிதி கிடையாது:** பெற்றோர், தாய் அல்லது தந்தை அரசு ஊழியராகவோ, பொதுத்துறை நிறுவன பணியாள –ராகவோ இருப்பின் அந்தக் குழந்தை அரசின் சிறப்பு நிதி மற்றும் கல்விச் செலவு சலுகையைப் பெற முடியாது.

**தனியார் பள்ளி:** குழந்தைகள் எந்தப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கி –றார்களோ அதே பள்ளியில் தொடர்ந்து படிக்கலாம். அது, அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளியாக இருக்க வேண்டும். தனியார் பள்ளியாக இருந்தால், கல்வி உரிமைச்சட்ட விதியின்கீழ் அப்பள்ளிக்கு கல்விக்கான கட்டணத்தொகை அளிக்கப்படும். இந்தத்தொகையானது PM–CARES அல்லது மாநில அரசின் நிதியிலிருந்து கொடுக்கப்படும். குழந்தைகளுக்கு உரிய பள்ளிச்சீருடைகள், நூல்கள் ஆகியனவும் அதே நிதியின் வழியாக அளிக்கப்படும். பள்ளிப்படிப்பு முடிந்ததும் இளநிலை பட்டப்படிப்பு வரையி –லான அனைத்து செலவையும் அரசே ஏற்கும். அரசு வழங்கும் இலவச கல்வியை ஏற்காத பட்சத்தில், இளநிலை கல்விக்கான செலவினை வங் –கிக்கடனை வழியாகப் பெற்று படிக்கலாம். இதற்கான வட்டித் தொகை –யை அரசே ஏற்றுக்கொள்ளும்.

**கண்காணிப்புக் குழு:** இந்தத் திட்டத்தை மாவட்டங்களில் கண்காணித்து செயல்படுத்த ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் உறுப்பினர் செயலாளராக, மாவட்ட குழந்தைகள்நல அலுவலர் இருப்பார். முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலர், குழந்தைகள் நல குழுவின் உறுப்பினர், தன்னார்வ தொண்டு நிறுவனத் –திலிருந்து ஒருவர் ஆகியோர் இதன் உறுப்பினர்களாக இருப்பர் என்று தனது உத்தரவில் ஷம்பு கல்லோலிகர் தெரிவித்துள்ளார்.

---

**6. இந்திய கடலோரக் காவல்படையில் Mk–3 அதிநவீன இலகு இரக ஹெலிகாப்டர்கள் சேர்ப்பு**

உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிநவீன இலகு ரக ஹெலிகாப்டர் Mk–3, இந்திய கடலோரக் காவல்படையில் சேர்க்கப்பட்டது. "தற்சார்பு இந்தியா" திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டவை இந்த ஹெலிகாப்டர்கள். இந்த நவீன ஹெலிகாப்டர்களை பெங்களூரில் உள்ள ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

இந்த இலகு ரக ஹெலிகாப்டர்கள் படையில் இணைக்கப்பட்டிருப்பதன் மூலம் கப்பல் சார்ந்த நடவடிக்கைகள், கண்காணிப்புப்பணிகளில் புதிய மாற்றம் ஏற்படும். விமானங்கள் மற்றும் கப்பல்களுடன் ஒருங்கிணைந்து குறிப்பிட்ட பகுதிகளில் சேவைகளின் திறனை வலுப்படுத்துவதற்காக இந்த ஹெலிகாப்டர்கள் பணியில் அமர்த்தப்படும் என்றார் அவர்.

சென்னை, புவனேசுவரம், கொச்சி மற்றும் போர்பந்தரில் உள்ள இந்திய கடலோரக் காவல்படை பிரிவுகளில் 16 Mk–3 ஹெலிகாப்டர்கள் சேர்க்கப் –படவுள்ளன.

---

**7. 1,50,000 ஆரம்ப, துணை சுகாதார நிலையங்கள் ஆயுஷ்மான் பாரத் சுகாதார மையங்களாக மாற்றப்படும்: மத்திய அரசு**

அடுத்த ஆண்டு டிசம்பருக்குள் 1,50,000 துணை சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்கள் ஆயுஷ்மான் பாரத் சுகாதார மற்றும் நல மையங்களாக மாற்றப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது: கடந்த மார்ச்.31ஆம் தேதி நிலவரப்படி, நாட்டின் கிராமப்புறங்களில் 1,55,404 துணை சுகாதார மையங்களும், 24,918 ஆரம்ப சுகாதார மையங்களும், நகர்ப்புறங்களில் 5,895 ஆரம்ப சுகாதார மையங்களும் உள்ளன.

அம்மையங்களில் விரிவான மருத்துவ சேவைகள் அளிக்கப்படும். துணை சுகாதார மையங்களில் 14 நோய் கண்டறிதல் பரிசோதனைகளு –ம், ஆரம்ப சுகாதார நிலையங்களில் 63 நோய் கண்டறிதல் பரிசோத –னைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. துணை சுகாதார மையங்களில் 105 அத்தியாவசிய மருந்துகள், ஆரம்ப சுகாதார மையங்களில் 172 அத்தியாவசிய மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. சஞ்சீவனி தளம்மூலம் 60 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தொலைபேசி வழியாக மருத்துவ ஆலோசனைகள் பெற்றுள்ளனர். அவர்களில் 26.42 இலட்சம் பேருக்கு சுகாதார மற்றும் நல மையங்கள்மூலம் ஆலோசனைகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**7. இந்திய வம்சாவளி செய்தியாளர்களுக்கு புலிட்சர் பரிசு**

இந்த ஆண்டுக்கான அமெரிக்காவின் புலிட்ஸர் பரிசுக்கு, இந்திய வம்சா –வளியைச் சேர்ந்த இரு செய்தியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: ஊடகத் துறைக்கான அமெரிக்காவில் மிக உயரிய விருதான புலிட்ஸர் விருதை, இந்திய வம்சாவளியைச்சேர்ந்த இருவர் இந்த ஆண்டு வென்றுள்ளனர்.

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் தடுப்பு முகாம் குறித்து புதுமையான முறையில் செய்திகள் சேகரித்து வெளிப்படுத்திய இந்திய வம்சாவளி செய்தியாளர் மேகா ராஜகோபாலன் இப்பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவின் 'புஸ்பீட் நியூஸ்' இணைய தள செய்தி ஊடகத்தில் அவர் பணியாற்றி வருகிறார். இதுதவிர, டம்பா பே டைம்ஸ் இதழில் பணியாற்றிவரும் நீல் பேடியும் இந்த ஆண்டுக்கான புலிட்ஸர் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அவர், சக செய்தியாளரான கேதலீன் மெக்கிரோரியுடன் சேர்ந்து இந்தப்பரிசை வென்றுள்ளார்.

எதிர்காலத்தில் குற்றவாளிகளாகக்கூடியவர்கள் என்று சந்தேகிக்கப்படு –வர்கள்குறித்து கணனி முறையில் கண்டறியும் உள்ளூர் காவல் அலுவ –லகத்தின் சர்ச்சைக்குரிய முயற்சிகள்குறித்து செய்திகள் வெளியிட்ட –மைக்காக அவர்களுக்கு புலிட்ஸர் விருது வழங்கப்படுகிறது என பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

**8. சமூக செயல்பாட்டுக்காக TNPL ஆலைக்கு தங்கமயில் விருது**

கரூர் மாவட்டம் புகளூர் TNPL ஆலைக்கு தங்கமயில் விருது கிடைத்துள் –ளது. இன்ஸ்டிட்யூட் ஆப் டைரக்டர்ஸ் நியு தில்லி என்ற அமைப்பானது ஒவ்வோர் ஆண்டும் வேளாண்மை, எண்ணெய் உற்பத்தி, பொறியியல், புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் உற்பத்தி, வங்கித்துறை, சிமெண்ட், காகித உற்பத்தி, சுரங்கம் மற்றும் உலோகம் போன்ற நிறுவனங்களில் சமுதாய

பொறுப்புணர்வு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் நிறுவனத்தை உலக அளவிலும், தேசிய அளவிலும் தேர்வுசெய்து தங்கமயில் விருதை வழங்கி வருகிறது.

இந்நிலையில், கரூர் மாவட்டம் புகழூர் TNPL ஆலையானது, ஆலையை சுற்றியுள்ள கிராமங்களைச்சேர்ந்த நலிவுற்ற சமுதாய குழந்தைகளுக்கு இலவசக்கல்வி வழங்குதல், அரசுப்பள்ளிகளில் மாணவர்களுக்கு ஆங்கி –லம் பேச்சுத்திறன் பயிற்சி அளித்தல், இலவச மருத்துவ முகாம்கள், கண் மருத்துவ முகாம்கள் நடத்தி தேவையான உதவிகள் வழங்குதல், அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல், கிராம மக்களுக்கு குடிநீர் வழங்குதல், ஏரி குளங்கள், கால்வாய்கள் தூர்வாரல், மரக்கன்றுகள் வழங்குதல், நடுதல் போன்ற எண்ணற்ற சமுதாய நலப்பணித்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2020ஆம் ஆண்டுக்கான சமுதாய பொறுப்புணர்வுக்காக வழங்கப்படும் தங்கமயில் விருதுக்கு தேசிய அளவில் புகழூர் காகித (TNPL) ஆலை தேர்வு செய்யப்பட்டது.

---

**9. தடுப்பூசி செலுத்தினாலும் தற்காப்பு அவசியம்!**

கரோனா தடுப்பூசிகள் செலுத்திக்கொண்டவர்கள் அலட்சியத்துடன் செயல்படாமல் கூடுதல் கவனத்துடன் இருக்கவேண்டும் என்று மருத்து –வர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இருமுறை தடுப்பூசி செலுத்தினாலும் கூட தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இருந்தபோதிலும் தடுப்பூசிகள் செலுத்தியவர்களுக்கு கரோனா பாதிப்பு குறைவாக இருப்பதும், இறப்புநேரிடுவதில்லை என்பதும் ஆதாரப்பூர்வ –மாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

**இந்தியாவில் தடுப்பூசிகள்...**

**கோவிஷீல்ட்:** பிரிட்டனின் ஆக்ஸ்போர்ட் மற்றும் ஆஸ்ட்ரா ஜெனிகா நிறுவனத்தால் கண்டறியப்பட்டது கோவிஷீல்ட் தடுப்பூசி. இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலம் புணேவில் உள்ள சீரம் நிறுவனத்தில் உள்நாட்டுத் தேவைக்காக அவை உற்பத்தி செய்யப்படுகின்றன. மாதந்தோறும் 6 கோடி தடுப்பூசிகள் அங்கு தயாரிக்கப்படுகின்றன.

சிம்பன்ஸியிலிருந்து பெறப்பட்ட வீரியம் குறைக்கப்பட்ட தீநுண்மியை (அடினோ வைரஸ்) மரபணுரீதியாக சில மாற்றங்கள் செய்து அதனை மனித உடலுக்குள் செலுத்தும் நுட்பத்தில் உருவாக்கப்பட்டது கோவி ஷீல்ட் தடுப்பூசி. முதல் தடுப்பூசிக்கும் இரண்டாவது தடுப்பூசிக்கும் இடையேயான கால இடைவெளி 12 வாரங்கள்.

**கோவேக்ஸின்:** தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனத்தின் மூலம் இத்தடுப்பூசிகள் தயாரிக்கப்படுகின்றன. செயலிழந்த கரோனா தீநுண்மியை மருத்துவ நுட்பத்தில் உரிய மாற்றங்கள் செய்து உடலில் செலுத்தும் வகையில் இந்த தடுப்பூசி தயாரிக்கப்படுகிறது. முதல் தடுப்பூசிக்கும் இரண்டாவது தடுப்பூசிக்குமான கால இடைவெளி 4 வாரங்கள்.

**ஸ்புட்னிக் வி:** ரஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இந்த வகை தடுப்பூசியும் அடினோ வைரஸ் தொழில்நுட்பத்திலானவைதான். இந்தியாவைப் பொருத்தவரை ஹைதராபாதில் உள்ள டாக்டர் ரெட்டிஸ் ஆய்வகத்தில் இத்தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய அவசரகால அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் அத்தடுப்பூசிகள் இருப்பில் இருந்தாலும் அவற்றின் பயன்பாடு இன்னமும் பரவலாக்கப்படவில்லை.

**ஏன் தேவை தடுப்பூசி?** பொதுவாக மனித உடலுக்குள் எந்த வகை கிருமி நுழைந்தாலும், அதனை விரட்டக்கூடிய எதிர்ப்புசக்தி தானாக உருவாகு –ம். அதுபோலத்தான் கரோனாவுக்கு எதிரான எதிர்ப்பாற்றலும் உருவா –கின்றன. பொதுவாக எவருக்கும் வாழ்நாள் முழுவதும் நிரந்தரமாக எதி –ர்ப்பாற்றல் உடலில் இருந்துகொண்டே இருப்பதில்லை. குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அது மறைந்துவிடும்.

அதேவேளையில், உடலில் உள்ள பி–செல்கள் மற்றும் டி–செல்கள் அந்த எதிர்பாற்றலை நினைவில் வைத்திருக்கும். மீண்டும் அத்தகைய தீ நுண்மி உடலுக்குள் நுழைந்தால் உடனடியாக அவை செயல்பட்டு எதிர் –ப்பாற்றலை உருவாக்கிவிடும். அவ்வகையில் தடுப்பூசிகள் செலுத்துவத –ன்மூலம் நோய் பாதிப்பின்றி உடலில் எதிர்ப்பாற்றல் உருவாகிவிடும். அதன்பின்னர் தீநுண்மி தாக்கினாலும்கூட எதிர்ப்பாற்றல் தூண்டப்பட்டு நோய்வராமல் காக்கும்.

**எப்போது எதிர்ப்பாற்றல் உருவாகும்?** பொதுவாக இரண்டாம் தவணை தடுப்பூசி செலுத்திய 3 வாரங்களுக்குப்பிறகு உடலில் நோய் எதிர்ப்பாற்ற –ல் உருவாகும். கரோனாவுக்கு எதிரான எதிர்ப்பாற்றல் உருவாகியுள்ள –தா என்பதை IGG என்ற இரத்தப்பரிசோதனைமூலம் கண்டறியலாம். ஒரு மில்லி ரத்தத்தில் எத்தனை ஆர்ப்பிட்டரி யூனிட்ஸ் (AU) எனப்படும் எதிர்ப்பாற்றல் உள்ளது என்பதை அதில் அறியலாம்.

**தடுப்பூசிக்குப் பிறகும் அவசியம் தேவை**

முகக்கவசம், கைகள் தூய்மை, தனி நபர் இடைவெளி, ஊட்டச்சத்துமிக்க உணவுகள், குறைந்தது 7 மநேர தூக்கம் உடற்பயிற்சி மற்றும் மூச்சுப் பயிற்சி, இரத்த சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தக்கட்டுப்பாடு மற்றும் மது, புகைப்பழக்கங்கள் இல்லாமை.

**எவருக்கெல்லாம் தடுப்பூசி கூடாது?** கரோனா சிகிச்சையிலிருப்போர், கரோனா அறிகுறிகள் காணப்படுவோர், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகள், தடுப்பூசியால் கடுமையான ஒவ்வாமைக்குள்ளாவோர் மற்றும் குழந்தைகள்.

**தடுப்பூசிகள் செயல்திறன்**

1) கோவிஷீல்ட் – 70 சதவீதம்.

2) கோவேக்ஸின் – 81 சதவீதம்.

3) ஸ்புட்னிக் வி – 90 சதவீதம்.

---

**10. அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையத்தில் பயின்றால் போதும் ஓட்டுநர் உரிமம் பெறலாம்: ஜூலை 1 முதல் புதிய விதி அமல்**

ஜூலை.1 முதல் ஓட்டுநர் உரிமம்பெற அங்கீகாரம் பெற்ற ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளில் முறையாகப் பயிற்சியை முடித்தாலே போதுமானது என மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தப்புதிய விதிமுறை வரும் ஜூலை.1ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் எனத்தெரிகிறது.

புதிய விதிமுறையால், சிறப்புப்பயிற்சி பெற்ற ஓட்டுநர்கள் கிடைப்பார்கள் இதனால் சாலை விபத்துகள் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மோட்டார் வாகன திருத்தச் சட்டம், 2019'இன் 8ஆம் பிரிவின்படி ஓட்டுநர் பயிற்சிப்பள்ளிகளின் அங்கீகார விதிகளை மாற்ற முடியும். அதன்படியே இந்தப் புதிய விதிமுறைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

**மத்திய அரசின் இந்தப்புதிய விதிமுறையின்படி அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களின் முக்கிய அம்சங்கள் என்னென்ன?**

1. இத்தகைய மையங்களில் பயிற்சியாளார்களுக்கு உயர்தர பயிற்சி அளிக்கும் வகையில் பிரத்யேக ஓடுதளங்கள் இருக்கும். இதனால், சிறப்பான பயிற்சி உறுதிசெய்யப்படும்.

2. இந்த மையங்கள் மூலம் மோட்டார் வானச் சட்டம் 1988ன் படி, ஒரு வாடிக்கையாளர் தனது வண்டி ஓட்டும் திறனை புதுப்பித்துக் கொள்ளும் வகையிலும் பயிற்சிகளை வடிமைக்கலாம்.

3. இத்தகைய அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களில் பயிற்சி பெறுபவர்கள் RTO அலுவலகத்தில் உரிமம் வழங்கப்படும்போது நடத்தப் –படும் தேர்வுகளில் பங்கேற்கத் தேவையில்லை. இதனால், பயிற்சி முடிந்தவுடனேயே வாகன ஓட்டிகளுக்கு உரிமம் கிடைத்துவிடும்.

4. அதேபோல் இந்த மையங்களில் தொழிற்சாலைகளுக்கான வாகனங் –களை இயக்கும் வகையிலும் பிரத்யேக பயிற்சியளிக்கப்படும். இதனால், பிரத்யேக, சிறப்பு வாகனங்களை இயக்குவோரின் பற்றாக்குறை தீரும். இதனால், சாலை விபத்துகள் தவிர்க்கப்படும்.

---

**11. இந்திய கடலோரக் காவல்படை புதிய ஐ.ஜி. பொறுப்பேற்பு**

இந்திய கடலோரக் காவல்படையின் கிழக்கு பிராந்திய புதிய IGஆக ஆனந்த் பிரகாஷ் படோலா பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதற்கு முன்பு IGஆக இருந்த எஸ் பரமேஷ், இந்திய கடலோரக் காவல் படையின் மேற்கு பிராந்திய கமாண்டராக மாற்றப்பட்டார். புதிதாக பொறுப்பேற்றுள்ள ஆனந்த் பிரகாஷ், இந்திய கடலோரக் காவல் படை பணியில் 1990'இல் சேர்ந்தார். உத்தரகண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ஆனந்த் பிரகாஷ், கடலோரக்காவல்படையில் சிறப்பாக பணியாற்றியதற் –காக, குடியரசுத்தலைவரின் தட்ரக்ஷக் விருதை பெற்றார். இத்தகவலை பாதுகாப்புத் துறை பத்திரிகை அலுவலகம் தெரிவித்துள்ளது.

---

**12. மருத்துவ கல்வி சேர்க்கை 51% அதிகரிப்பு: பொறியியல் சேர்க்கை 13% சரிந்தது**

இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் மருத்துவக் கல்வி சேர்க்கை 51% அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில் பொறியியல் கல்விச்சேர்க்கை 13.4% சரிந்திருக்கிறது என மத்திய கல்வி அமைச்சக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய கல்வி அமைச்சகத்தின்கீழ் செயல்படும் அகில இந்திய உயர்கல்வி ஆய்வுப்பிரிவு, நாடு முழுவதும் செயல்படும் உயர்கல்வி நிறுவனங்கள் குறித்து ஆய்வுசெய்து ஆண்டுதோறும் அறிக்கை வெளியிட்டுவருகிறது. அதன்படி 2019-20 ஆண்டுக்கான ஆய்-வறிக்கை வெளியிடப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது:

நாடு முழுவதும் 1,043 பல்கலைக்கழகங்கள், 42,434 கல்லூரிகள், 11,779 சுயநிதி கல்வி நிறுவனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. கடந்த 2019-20 கல்வியாண்டில் 3.85 கோடிபேர் உயர்கல்வியில் சேர்ந்துள்ள-னர். இதில் 1.96 கோடிபேர் மாணவர்கள், 1.89 கோடிபேர் மாணவிகள்.

**உத்தர பிரதேசம் முதலிடம்**

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. மகாராஷ்டிரா 2ஆவது இடத்திலும் தமிழ்நாடு 3ஆவது இடத்தி-லும் உள்ளன. ராஜஸ்தான், கர்நாடகம், மத்திய பிரதேச மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. நாடு முழுவதும் உயர்கல்வி நிறுவனங்களில் 15,03,156 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில் 57.5 சதவீதம் பேர் ஆண்கள். 42.5 சதவீதம் பேர் பெண்களாவர்.

நாட்டின் உயர்கல்விநிறுவனங்களில் 78.6% நிறுவனங்கள் தனியாரை சேர்ந்தவை அதிகபட்சமாக ஆந்திராவில் 81%, தெலங்கானாவில் 80%, உத்தர பிரதேசத்தில் 78.5%, தமிழ்நாட்டில் 77.6 சதவீத தனியார் கல்வி நிறுவனங்கள் செயல்படுகின்றன.

கடந்த 5 ஆண்டுகளில் மருத்துவக்கல்வி மாணவர் சேர்க்கை 51.1% அதிகரித்திருக்கிறது. இதே காலகட்டத்தில் பொறியியல் கல்வி மாணவர் சேர்க்கை 13.4% சரிந்திருக்கிறது.

**1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பண்டிட் தீனதயாள் ஆற்றல் பல்கலைக்கழகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) மகாராஷ்டிரா

**ஆ) குஜராத் ☑**

இ) உத்தர பிரதேசம்

ஈ) கர்நாடகா

✓ குஜராத் மாநில அரசானது மாநிலத்தின் ஏழு தனியார் பல்கலைக்கழகங்க –ளுக்கு சிறப்பு அந்தஸ்தை வழங்க முடிவுசெய்துள்ளது. நிர்மா பல்க –லைக்கழகம், CEPT பல்கலைக்கழகம், பண்டிட் தீனதயாள் ஆற்றல் பல்கலைக்கழகம், DAIICT, ஆமதாபாத் பல்கலைக்கழகம், சரோட்டர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் மார்வாடி பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஏழு பல்கலைக்கழகங்களுக்கு சிறப்பு அந்தஸ்தை வழங்க குஜராத் மாநில முதலமைச்சர் விஜய் ரூபானி கொள்கை அடிப்படையில் ஒப்புதல் அளித்தார்.

---

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Canadarm2' என்றால் என்ன?**



அ) COVID தடுப்பு மருந்து

ஆ) உள்நாட்டு வான் போக்குவரத்து திட்டம்

**இ) பன்னாட்டு விண்வெளி நிலையத்தின் எந்திரக்கை ☑**

ஈ) கஞ்சா ஒழிப்புத் திட்டம்

✓ சமீபத்தில், 'Canadarm2' என அழைக்கப்படும் ISS'இன் எந்திரக்கையின் ஒருபகுதியை விண்வெளி குப்பைகள் தாக்கி சேதப்படுத்தின. கையின் செயல்பாடுகள், சேதத்தால் பாதிக்கப்படாது என்பதை வானியலாளர்கள் உறுதிப்படுத்தினர். விண்வெளி நிலைய தொலைநிலை கையாளுதல் அமைப்பான 'Canadarm2', நிலையத்திற்கு வெளியே பொருட்களை நக –ர்த்தவும், நிலையத்தில் பணிகளை சரிசெய்யவும் பயன்படுகிறது.

---

**3.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'செஞ்சுற்றுலா' என்பதுடன் தொடர்புடைய நாடு எது?**



அ) இந்தோனேசியா

ஆ) இந்தியா

**இ) சீனா ☑**

ஈ) இலங்கை

✓ கம்யூனிஸ்ட் கட்சிசார்ந்த வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மேம்படுத்துவதற்காக, சீனா, 2004ஆம் ஆண்டில் 'செஞ்சுற்றுலா'வை அறிமுகப்படுத்தியது. இது நாட்டில் சுற்றுலாவோடு இணைந்து உள்ளூர் வணிகங்களை மேம்படுத்துவதையும் நோக்கமா –கக்கொண்டது. அண்மையில், 'செஞ்சுற்றுலா'வின்கீழ் உள்ள இடங்கள் அதிக எண்ணிக்கையிலான பயணிகளுடன் சாதனைபடைத்தது.

✓ 1921ஆம் ஆண்டில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் தேசிய காங்கிரஸ் நடைபெற்ற நன்ஹூ ஏரி மற்றும் மாவோ சேதுங்கின் பிறப்பிடமான ஷோஷன் ஆகியவை அடங்கும்.

---

**4. அண்மையில் 7 மநேர விண்வெளி நடைபயணத்தை நிகழ்த்திய ஒலெக் நோவிட்ஸ்கி மற்றும் பியோட்ர் டுப்ரோவ் ஆகியோர் சார்ந்த நாடு எது?**



அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**ஆ) ரஷ்யா ☑**

இ) இஸ்ரேல்

ஈ) பிரான்ஸ்

✓ ஒலெக் நோவிட்ஸ்கி மற்றும் பியோட்ர் டுப்ரோவ் ஆகிய இரண்டு ரஷ்ய விண்வெளி வீரர்கள், பன்னாட்டு விண்வெளி நிலையத்திலிருந்து 7 மநேர விண்வெளியில் நடைபயணத்தில் ஒரு புதிய ரஷ்ய தொகுதிக்கு வந்து சேரந்தனர்.

✓ ஏப்ரலில் விண்வெளி நிலையத்திற்கு வந்த இவ்விரு விண்வெளி வீரர்க –ளுக்கும் இது முதல் விண்வெளிப்பயணமாகும். புதிய நௌகா (அறிவிய –ல்) பல்நோக்கு ஆய்வக தொகுதி வருவதற்கு முன்பு, பன்னாட்டு விண் –வெளி நிலையத்திற்கு வெளியே பழைய மின்கலங்களை மாற்றுவது உள்ளிட்ட தொழில்நுட்ப பணிகளை அவர்கள் மேற்கொள்வர்.

---

**5. மதுரா மற்றும் பானஸ்கந்தா ஆகியவற்றை எந்தத் துறையில் ஏற்றுமதி மேம்பாட்டுக்கான தொகுதிகளாக APEDA இனங்கண்டுள் –ளது?**

அ) ஜவுளி

**ஆ) பால் ☑**

இ) பருத்தி

ஈ) பழங்கள்

✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டாணையமானது (APEDA) பால்பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக ஒரு ஏற்றுமதி ஊக்குவிப்பு மன்றத்தை அமைத்து உள்ளது. இத்துறையிலுள்ள பல்வேறு சிக்கல்களுக்கு தீர்வுகாண்பதும் இதன் நோக்கமாகும். பால் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதற்காக உத்தர பிரதேச மாநிலத்தில் மதுரா மற்றும் குஜராத்தில் பானஸ்காந்தா ஆகிய இரண்டு தொகுதிகளுக்கு இந்த ஆணையம் அங்கீகரித்துள்ளது.

✓ இத்தொகுதிகளில் உள்ள உழவர்கள் மற்றும் சிறு பால் வணிகர்களுக்கு ஏற்றுமதியில் திறனை வளர்ப்பதற்கு பயிற்சியும் உதவியும் வழங்கப்படும்.

---

**6. CSIR–NCL ஆனது பின்வரும் எந்த மருத்துவ முறையைப் பயன்படுத்தி, தண்ணீரைக் கிருமிநீக்கம் செய்ய, 'SWASTIIK' என்ற தொழில்நுட்பத்தை உருவாக்கியது?**

அ) சித்த மருத்துவம்

**ஆ) ஆயுர்வேதம் ☑**

இ) ஹோமியோபதி

ஈ) சோவா–ரிக்பா

✓ புனேவில் உள்ள CSIR–தேசிய வேதியியல் ஆய்வகமானது (CSIR–NCL) இயற்கை எண்ணெய்களைப் பயன்படுத்தி தண்ணீரைக் கிருமிநீக்கம் செய்வதற்காக, 'SWASTIIK' என்ற தொழினுட்பத்தை உருவாக்கியுள்ளது.

✓ அறிவியல் & தொழில்நுட்பத் துறையின் தொழில்நுட்ப முன்முயற்சியின் ஆதரவுடன், இத்தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

✓ அழுத்தக்குறைப்பின் (குழிவுறுதல்) மூலமாக ஒரு திரவத்தை கொதிக்கச் செய்து, பின்னர் கிருமிநீக்கம் செய்வதற்கு, நுண்ணுயிர்க்கொல்லி பண்பு –களைக் கொண்ட இயற்கை எண்ணெய்களை இது பயன்படுத்துகிறது.

---

**7. நிலையாக வளர்ச்சியுறும் அமைப்பு (Standard Developing Organiz –ation) என அறிவிக்கப்பட்ட இந்தியாவின் முதல் நிறுவனம் எது?**

**அ) RDSO ☑**

ஆ) IRCTC

இ) DRDO

ஈ) RITES

✓ இந்திய இரயில்வேயின்கீழ் செயல்படும் ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தரநிலைகள் அமைப்பானது (RDSO) சமீபத்தில் நிலையாக வளர்ச்சியுறும் அமைப்பு என அறிவிக்கப்பட்ட நாட்டின் முதல் நிறுவனமாக மாறியுள்ளது. அரசாங்கத்தின் "ஒரு நாடு ஒரு தரம்" என்ற இலக்கை அடைவதற்காக, 'SDOஐ அங்கீகரித்தல்' என்ற திட்டத்தை இந்திய தரநிர்ணய அமைப்பு (BIS) அறிமுகப்படுத்தியது.

---

**8.PMGKP'இல் உள்ள புதிய முறையின்படி, காப்பீட்டு நிறுவனங்கள் ____சான்றிதழின் அடிப்படையில் இழப்பீடுகளுக்கு ஒப்புதலளித்து தீர்வு காணலாம்.**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) மாவட்ட ஆட்சியர் ☑**

இ) தலைமைப் பதிவாளர்

ஈ) மாவட்ட நீதிமன்றம்

✓ COVID–19 தொற்றுடன் போராடும் சுகாதார ஊழியர்களுக்கான பிரதமர் கரீப் கல்யாண் தொகுப்பு (PMGKP) காப்பீட்டு திட்டம், அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் ₹50 லட்சம் என்ற காப்பீடு வரம்புடன் தொடங்கப்பட்ட

திட்டமாகும். சமீபத்தில், இழப்பீடு கோருவோரை அங்கீகரிப்பதற்கான புதிய அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இழப்பீடுகோரல் திட்டத்தின் நடைமுறைக்கு இணங்க மாவட்ட ஆட்சியர் சான்றளிப்பார்.

✓ மேலும் இந்தச் சான்றிதழின் அடிப்படையில், காப்பீட்டு நிறுவனம், 48 மணி நேரத்திற்குள்ளாக இழப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்து தீர்வு காணும்.

---

**9.பன்னாட்டு நைட்ரஜன் முன்முயற்சி – 2021'ஐ நடத்திய நாடு எது?**

அ) பிரான்ஸ்

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**இ) ஜெர்மனி ☑**

ஈ) ஆஸ்திரேலியா

✓ பன்னாட்டு நைட்ரஜன் முன்முயற்சியை ஜெர்மனியின் பெடரல் சுற்றுச் சூழல் முகமை (Umweltbundesamt–UBA) நடத்தியுள்ளது. ஐநா அவையி –ன் நீடித்த வளர்ச்சி இலக்குகள், மூன்றாண்டுக்கு ஒருமுறை நடக்கும் எட்டாவது பன்னாட்டு நைட்ரஜன் முன்முயற்சி மாநாட்டின் முக்கிய கருப் பொருளாக இருந்தது. இது, 2021 மே.31 முதல் ஜூன்.3 வரை மெய்நிகர் முறையில் நடைபெற்றது.

---

**10.நடுவணரசால் மாநிலங்களவைக்கு பரிந்துரைக்கப்பட்ட மகேஷ் ஜெத்மலானியின் தொழில் என்ன?**



அ) மருத்துவர்

**ஆ) வழக்குரைஞர் ☑**

இ) அறிவியலாளர்

ஈ) வங்கியாளர்

✓ புகழ்பெற்ற வழக்குரைஞரான மகேஷ் ஜெத்மலானி, சமீபத்தில், நடுவண் அரசால் மாநிலங்களவைக்கு பரிந்துரைக்கப்பட்டார். மேலும், முன்னாள் பத்திரிகையாளர் சுவபன் தாஸ்குப்தாவும் மாநிலங்களவைக்கு பரிந்து –ரைக்கப்பட்டுள்ளார். ரகுநாத் மோகபத்ராவின் மறைவின் காரணமாக ஏற்பட்ட காலியிடங்களை நிரப்பும் பொருட்டு மகேஷ் ஜெத்மலானி மாநில –ங்களவைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இஸ்ரேல் புதிய பிரதமராக பென்னட் பதவியேற்பு: நெதன்யாகு ஆட்சி முடிவுக்கு வந்தது**

இஸ்ரேலின் புதிய பிரதமராக நப்தாலி பென்னட் பதவியேற்றுக்கொண் –டார். 2009ஆம் ஆண்டிலிருந்து இஸ்ரேலின் பிரதமராக பெஞ்சமின் நெதன்யாகு பதவிவகித்தார். பெஞ்சமின் நெதன்யாகு மீது ஊழல், மோசடி மற்றும் நம்பிக்கை மோசடி புகார்கள் கடந்த சில ஆண்டுகளாக எழுந்து வந்தன. அங்கு இரண்டு ஆண்டுகளாக 4 முறை நாடாளுமன்ற தேர்தல் நடந்தும் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

கடந்த மார்ச் மாதம் 23ஆம் தேதி நடந்த தேர்தலில், மொத்தம் உள்ள 120 இடங்களில் பெஞ்சமின் நெதன்யாகு கட்சி 54 இடங்களைப் பிடித்தது. தனிப்பெரும் கட்சியாக வந்தபோதும் அவரால் கூட்டணி அரசு அமைக்க முடியவில்லை. இதனால் இழுபறி நிலைமை நீடித்தது. அங்கு எட்டு எதிர் –க்கட்சிகள் ஒன்றாக சேர்ந்து கூட்டணி அமைத்தன. இஸ்ரேலில் அரபு கட்சி தலைமையில் எட்டு அரசியல் கட்சிகள் கூட்டாக இணைந்து நெதன்யாகுவின் ஆட்சிக்குத் தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளன.

இக்கூட்டணிக்கட்சிகள் சுழற்சி முறையில் பிரதமர் பதவியைப் பகிர்ந்து கொள்ளவுள்ளன. இதன்படி வலதுசாரி கட்சியான யாமினா கட்சியின் தலைவர் நப்தாலி பென்னட் பிரதமராகப் பதவியேற்பார் என்றும் அறிவிக் –கப்பட்டது. இதன்மூலம் பெஞ்சமின் நெதன்யாகுவின் 12 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. இதனைத்தொடர்ந்து இஸ்ரேல் நாடாளும –ன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில் யமினா கட்சி தலைவர் நப்தாலி பெனட் வெற்றிபெற்றார். இதையடுத்து, இஸ்ரேலின் புதிய பிரதமராக நப்தாலி பென்னட் பதவியேற்றுக்கொண்டார்.

**இஸ்ரேல்: சில தகவல்கள்**

**தலைநகரம்:** ஜெருசலம்

**அலுவல் மொழி:** ஹீப்ரூ

**நாணயம்:** இஸ்ரேலிய சேக்கல்

**2. பிரெஞ்சு ஓப்பன்: ஜோகோவிச் சாம்பியன்**

பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரில் செர்பியாவின் ஜோகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார். பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் பாரீஸ் நகரத்தில் நடைபெற்றது. இதில் உலகின் முதல் நிலை வீரர் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஐந்தாம் நிலை வீரரான கிரீஸ் நாட்டைச் சிட்ஸிபாஸை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் 6–7, 2–6, 6–3, 6–2, 6–4 என்ற செட் கணக்கில் சிட்ஸிபாஸை வீழ்த்தி வாகை சூடினார் ஜோகோவிச். இது ஜோகோவிச் வெல்லும் 19ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும். ரோஜர் பெடரர், ரஃபேல் நடால் தலா 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று முதலிடத்தில் உள்ளனர்.

---

**3. ஜூன்.14 – உலக குருதிக்கொடை நாள்**

**கருப்பொருள்:** Give Blood and Keep the World Beating.

---